தலைமுறை

கலைஞர்

க. திருவேங்கடம்
57 4வது தெரு,
ராமாபுரம், சென்னை-89

அலைகடல் மறவம்

தலைவர் கலைஞர்

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

வெளியீடு:
தி.மு.க இளைஞர் அணி
"அன்பகம்"
சென்னை - 600 018.

முதற்பதிப்பு : ஆகஸ்டு 1994

34708

விலை : ரூ : 10/-

அச்சிட்டோர்:

ரவி டிரேடிங் கார்ப்பரேஷன்,
பிரிண்டிங் பிரஸ்.
183, டாக்டர். நடேசன் சாலை, சென்னை - 5
© : 842816


இந்நூல்.....

1994 ஜூலை 27 அன்று சென்னை, மயிலாப்பூர் ஏ.வி.எம். இராஜேஸ்வரி திருமண மண்பத்தில் "அக்னி" அமைப்பின் சார்பில் நடைபெற்ற விழாவில் "சங்க காலத் தமிழ்" எனும் தலைப்பில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய இலக்கியப் பேருரையினை "இலக்கிய முழக்கம்" என்கிற தலைப்பில் தி.மு.க இளைஞர் அணியின் சார்பில் இந்நூல் வடிவில் பெருமையுடன் வெளியிடுகிறோம்.

- தி.மு.க. இளைஞர் அணி

34718
894.8115 Ja
INB

நூலகம்
சென்னை-18
அறிவாலயம்



'அக்னி' அமைப்பு நடத்திய நிகழ்ச்சியில் தலைவர் கலைஞர் ஆற்றிய உரை!

'அக்னி அமைப்பின் சார்பில் 27-7-1994 மாலை நடை பெற்ற விழாவில் 'சங்க காலத் தமிழ்' எனும் தலைப்பில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய இலக்கியப் பேருரை வருமாறு:

வரவேற்றுப் பேசியோர்: தமிழ் மழை பொழியும் என்று சொல்லி என்னை அழைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே இரண்டு நாட்களாக விழா நிகழ்ச்சி நடைபெறும்பொழுது மழை பொழிந்தது என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இன்று அந்த மழையும் சேர்ந்து பொழிய வேண்டாம் என்கின்ற விண்ணப்பத்தோடு என்னுடைய உரையை தொடங்குகின்றேன். 'அக்னி' அமைப்பின் சார்பாக நல்ல பல பணிகளை கடந்த காலத்திலே நிறைவேற்றி வருகின்ற இந்த அறங்காவல் குழுவினர் தமிழை வளர்ப்பதற்கும் போற்றுவதற்கும், பாதுகாப்பதற்கும் மேலும் அதற்கு வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் இத்தகைய நிகழ்ச்சிகளை நடத்தத் தொடங்கியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

அழுதுக்கு மாத்திரமல்ல; தமிழுக்கும் அழுதென்றுதான் பேர்!

"தமிழுக்கும் அழுதென்று பேர்" என்ற தலைப்பில் இந்த மூன்று நாள் நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 'தமிழுக்கும் அழுதென்று பேர்' என்று அந்த சொற்றொடரை ஆழ்ந்து கவனிக்க வேண்டும். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதை வரி அது. "தமிழுக்கு அழுதென்று பேர்" என்று புரட்சிக் கவிஞர். சொல்லாமல் "தமிழுக்கும் அழுதென்று பேர்" என்று ஏன் சொன்னார் என எண்ணிப்பார்த்தால், ஏற்கனவே அழுதுக்கு அழுதென்று பேர். அத்துடன் தமிழுக்கும் அந்தப் பெயர்தான் (பலத்த கைத்தட்டல்) என்பதை எடுத்துக்

காட்டுகின்ற வகையில்தான் புரட்சிக் கவிஞர், அழுதுக்கு மாத்திரம் அழுதென்று பெயர் இல்லை. தமிழுக்கும் அழுதென்று தான் பெயர் என்று மிக அழகு பட அந்த கவிதை வரிகளை தீட்டியிருக்கின்றார்.

அந்தத் தலைப்பில் மூன்று நாட்கள் சொற்பொழிவு நேற்றைக்கு முன்தினம் அருமைத் தம்பி வலம்புரிஜான் "தற்காலத் தமிழ்" என்ற தலைப்பிலும், நேற்றைய தினம் இலக்கியச் செல்வர் குமரிஅனந்தன் "இடைக்காலத் தமிழ்" என்ற தலைப்பிலும், இன்று நான் "சங்ககாலத் தமிழ்" என்ற தலைப்பிலும் உரையாற்றுகின்ற வாய்ப்பு அமைந்திருக்கின்றது.

தற்காலத் தமிழ், இடைக்காலத் தமிழ், சங்க காலத் தமிழ் என்ற இந்த மூன்றையும் நினைக்கும்போது, தமிழகத்திலே மிகச் சிறப்பாக போற்றப்படுகின்ற முக்கனியின் நினைவுதான் எனக்கு வருகின்றது. முத்தமிழ், மும்முரசு என்றெல்லாம் வழங்கப்படுகின்ற அந்த வரிசையில் முக்கனியும் நீண்ட நெடுநாட்களாக வழங்கப்படுகின்ற வார்த்தையாகும். வாழை!மா!பலா!

வலம்புரிஜான் பேசிய அந்த 'தற்காலத் தமிழ்' என்ற தலைப்பு வாழைக்கனி போன்றது. கஷ்டமில்லாமல் உரித்து சாப்பிட்டுவிடலாம். (பலத்த சிரிப்பு) நேற்று இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் பேசிய அந்தத் தலைப்பு 'இடைக்காலத்தமிழ்' வாழைப்பழத்தைப் போல அவ்வளவு சுபலமாக சாப்பிட இயலாது. மாம்பழத்தில் தோலைச் சீவ வேண்டும். அல்லது அறுத்துச் சாப்பிட வேண்டும். அல்லது வாயிலே வைத்து உறிஞ்சிச் சாப்பிட வேண்டும். அவ்வளவுதான்!

'பலாக்கனி' யாகக் கிடைத்துள்ள ' சங்க காலத் தமிழ்'

எனக்குக் கிடைத்திருப்பதோ பலாக் கனி. (பலத்த கைத்தட்டல் - சிரிப்பு) சங்க காலத் தமிழ் - பலாக் கனி போன்றது. சங்க காலத் தமிழிலே கையாளப்படுகின்ற சொற்கள் எளிதில் புரியக் கூடியவை அல்ல. சற்றொப்ப இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, செய்யுள்களில் அகத்தில்,புறத்தில், பத்துப் பாட்டில், எட்டுத்தொகையில், பதினெண் கீழ்க் கணக்கில் இப்படியெல்லாம் இடம் பெற்ற அந்த சொற்களுக்கு, பொருள் காண வேண்டுமேயானால் அதை எளிமையாக்கி புலவர்கள்

பொருள் சொல்ல, அதை மேலும் எளிமையாக்கி அடுத்து வருகின்ற அறிஞர்கள் பொருள் சொல்ல, அதற்குப் பிறகுதான் சங்ககாலத்தமிழ் என்ற அந்த பலாச்சுளையை நாம் பெற முடியும்.

பலாப் பழத்தின் முள், அது அகற்றப்பட்டால் தோல், அது அகற்றப்பட்டால் தசைத் துணுக்குகளாக வருகின்ற சில பொருட்கள், அது அகற்றப்பட்டால் அதோடு ஒட்டியிருக்கின்ற நரம்புகள், அதையும் தாண்டிச் சென்றால் கையில் ஒட்டிக் கொள்கின்ற 'பிசின்' அதையும் தாண்டிய பிறகுதான் பலாச் சுளை நமக்கு கிடைக்கிறது. அதைப்போலத்தான் இவ்வளவு சிரமங்களையும் ஏற்று கொண்டுதான் பலாச் சுளை போன்ற சங்கத் தமிழை நாம் உணர முடிகிறது. சங்க காலத் தமிழ் செய்யுள்களை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

இந்த மூன்று தலைப்புகளில் முக்கிய தலைப்பாக, இன்னும் சொல்ல வேண்டுமேயானால், தலையாய தலைப்பாக, தமிழுக்கும் அமுதென்று பேர் இட்டுள்ள அக்னி அமைப்பிற்கு நான் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

'அமிழ்து' என்றால் என்ன ?
வள்ளுவர் தரும் விளக்கம்

அமிழ்து என்றால் என்ன? அதுவே ஒரு பெரிய ஆராய்ச்சி. அமிழ்து என்பதற்கு என்ன பொருள் என்று திருக்குறளைத் தேடினால்,

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

வேறு எதுவும் அமுது இல்லை. நம்முடைய குழுந்தை நாம் கூழ் குடித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் தவழ்ந்து வந்து அந்த பாத்திரத்தில் தன்னுடைய கையை விட்டு அளாவுகிறதே; அப்படி அளாவிய மாத்திரத்தில் அந்த ஏழைக் குடிசையில் கலயத்தில் ஊற்றப்பட்ட கூழ்கூட அமிழ்தத்தைவிட சிறப்பானதாக ஆகிவிடுகிறது என்கிறார் வள்ளுவர்.

இன்னொரு இடத்தில்
"வானின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று"
என்று குறிப்பிட்டார்.

புராணத்தில் வந்த அமிழ்தமும் - ஆலகால விஷமும்!

ஆனால் அமிழ்தம் பற்றிய புராணக் கதை ஒன்று உண்டு. தேவர்களும், அசுரர்களும் மேருமலையை மத்தாகக் கொண்டு, வாசுகி என்ற நீளமான பாம்பை கயிறாகப் பிடித்து திருப்பாற் கடலைக் கடைந்து, அப்படி கடையும் போது - மோர் கடையும் போது வெண்ணெய் திரள்வதைப்போல அமுதமும், விஷமும் திரண்டு வந்து, அமுதத்தை தேவர்கள் எடுத்துக் கொண்டு விஷத்தை மிச்சம் வைத்தபோது, உலகமே அழிந்து விடுமோ என்கின்ற அச்ச உணர்ச்சி ஏற்பட்டு, எல்லோரும் சிவனிடத்திலே போய் வேண்டி நிற்க, விஷத்தை நான் கடலிலே விட்டு வைக்க மாட்டேன் என்று அவரே அதைவாரி எடுத்து அந்த விஷத்தை அவரே உண்டு உலகத்தைக் காப்பாற்றுகிறேன் என்று அவர் வாயிலே போட்டுக் கொள்ள; விஷம் முழுமையாக வயிற்றுக்குள்ளே சென்றால் கணவருக்கு ஆபத்து வருமே என்று பயந்து பக்கத்திலே இருந்த பார்வதி சிவபெருமானின் கழுத்தைப் பிடித்து அந்த விஷத்தை நிறுத்திவிட அது கண்டத்திலேயே நின்றுவிட்டது. அதனால் தான் நீலகண்டன். அப்படி அன்றைக்கு சிவனுடைய கழுத்திலே நின்ற அந்த கண்டம்தான் உலகத்திலே இருக்கிற எல்லா ஆண்களுக்கும் இப்பொழுது கண்டமாக தொட்டுப் பார்த்தால் தெரியும் (பலத்த சிரிப்பு) இப்படியொரு புராணம் அமிழ்தத்திற்கு உண்டு.

ஆனால் பாரதிதாசன் அமிழ்தத்தைப் பற்றி என்ன சொல்கிறார். ஏனென்றால் "தமிழுக்கும் அமுதென்று பேர்" என்று சொன்னவரல்லவா? எனவே புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் சொல்கிறார். அமிழ்தம் என்றால் எல்லாவற்றையும் விட உயர்ந்த ஒரு பொருளுக்கு அமிழ்தம் என்று பெயர் குறிப் பிடுகிறார். மழை எல்லாவற்றையும் விட உயர்ந்தது அல்லவா?

"வானின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று"

என்று குறிப்பிட்டானே வள்ளுவன், அந்த அமிழ்தம் இருந்தால் தான் உழவன் வாழ முடியும். உழவன் வாழ்ந்தால்தான் உலகம் வாழ முடியும்.

எனவே அந்த அமிழ்தத்தைத் தலைப்பாக வைத்துத்தான் "தமிழுக்கும் அமுதென்று பேர்" என்று இந்தத் தலைப்பை இன்றைக்கு அமைத்துக் கொடுத்து மூன்று நாட்களாக எங்களை பேச வைத்திருக்கின்றார்கள்.

"அக்னி" என்கின்ற இந்த அமைப்பின் மீது, இது ஆரம்பிக்கப்பட்ட போது எனக்கொரு வெறுப்பு! உண்மையைச் சொல்ல வேண்டும். அம்மையார் சிவசங்கரி என்னிடத்திலே பல தடவை தொலைபேசி மூலம் அழைத்த நேரத்தில்கூட அது என்ன 'அக்னி' எனறு பெயர் வைத்திருக்கிறீர்கள். வடமொழிப் பெயர். எனவே நான் வர இயலாது என்று அப்பட்டமாகச் சொல்லாவிட்டாலும், வருகிறேன், வருகிறேன் என்று ஓராண்டு காலமாக நாள் கடத்திக் கொண்டிருந்தேன். இப்போதும் கூட நண்பர் மாலனும், சிவசங்கரியும் என்னைச் சந்தித்து இந்த நிகழ்ச்சிக்கு வர வேண்டும் என்று வலியுறுத்தியபோது முதலில் ஒப்புக் கொண்டாலும், அம்மையார் இங்கே சொன்னார் "வலம்புரிஜானும், இலக்கியச்செல்வரும் மாணவர்கள் தேர்வுக்கு படிப்பதைப் போல படித்துவிட்டு வந்து இங்கு பேசினார்கள்" என்று. நானும் அப்படித்தான் அம்மா! (பலத்த கைத்தட்டல்).

நான் ஆறு அல்லது ஏழு நாட்களுக்கு முன்பு மாலனிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, இந்த நாட்களை சற்று தள்ளி வைத்துக் கொள்ளலாமா என்று கேட்டேன். ஏன் என்று கேட்டார். 'மதுரையிலே எங்கள் இயக்கத்தின் மாநாடு இருக்கிறது. அதற்கு இடையிலே கட்சியின் பொருளாளர் தேர்தல் இருக்கிறது. அதிலே யாராவது எந்த குழப்பங்களையாவது பத்திரிகைகளில் ஏற்படுத்துவார்கள். (பலத்த கைத்தட்டல்) அதையெல்லாம் சமாளிக்க வேண்டிய பிரச்சினை இருக்கிறது. எனவே ஆகஸ்ட் திங்களில் வைத்துக் கொண்டால் எனக்கும் வசதியாக இருக்கும். நீங்கள் விரும்பினால் நானே வலம்புரி ஜானுக்கும், குமரி அனந்தனுக்கும் தொடர்பு கொண்டு பேசி அவர்களையும் ஒப்புக் கொள்ளச் சொல்கிறேன்" என்றெல்லாம் சொல்லிப் பார்த்தேன். அவர் ஒரேயடியாக

உண்மையோ, பொய்யோ தெரியாது. முதலில் அழைப்பித ழெல்லாம் அச்சடிக்கப்பட்டாகி விட்டது என்றார். அடுத்த வினாடியே அவற்றை அனுப்பியாகி விட்டது என்றும் சொன்னார்.

பத்திரிகைச் செய்தியால் ஏற்பட்ட பாதிப்பு!

சரி எப்படியும் தயாரித்து விடுவோம் இந்த உரையை என்பதற்காக நான் தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டத்திற்கு சென்றபோது ஒரு நாள் நெய்வேலியில் தங்கி, இதற்கான குறிப்புகளை எடுப்பது என்று முடிவு செய்து என்னுடன் வந்த நண்பர் வீராசாமி, துரைமுருகன் இவர்களையெல்லாம் அங்குள்ள இயக்க வேலைகளுக்கு நீங்கள் சென்று வாருங்கள் என்று அவர்களை அனுப்பி விட்டு காலையில் எட்டு மணிக்கு படிக்கின்ற பணியை தொடங்கினேன். அந்த நேரம் பார்த்து தினமணி பத்திரிகையை என் கையிலே கொண்டு வந்து கொடுத்தார்கள். அதிலே இருந்த 'பேசிக்கொள்கிறார்கள்'என்ற தலைப்பில் வந்த ஒரு செய்தியில், "தி.மு.க. பொருளாளர் தேர்தலில் பலத்த போட்டி. கருணாநிதி தடுமாறுகிறார். தவிக்கிறார். இன்னின்னார் போட்டியிடுகிறார்கள். யாரோ உறவினர் வெளிநாட்டிலிருந்து வந்தபிறகுதான் இது நிர்ணயிக்கப்படும்". என்றெல்லாம் செய்தி வந்தவுடன் நான் ஒரு ஐம்பத்தாறு ஆண்டுகாலம் அரசியல் வாழ்வில் இருந்தாலும்கூட, ஒரு சென்சிடிவ் என்பார்களே ஆங்கிலத்தில், அதைப்போல இதுபோன்ற செய்திகள் வருகின்ற நேரத்தில் நான் சற்று பலகீனம் அடைவது வழக்கம். இதை வைத்துக் கொண்டு எல்லோரும் என்னை பலகீனப்படுத்தலாம் என்று எண்ணாதீர்கள். (பலத்த சிரிப்பு) ஒரு சோர்வு ஏற்பட்டது. உடனடியாக எல்லாவற்றையும் எடுத்து வைத்துவிட்டு அன்றையதினம் நான் எதையும் படிக்கவில்லை. படுத்து தூங்கிவிட்டு மாலை நிகழ்ச்சிகளுக்குச் சென்றுவிட்டேன்.

எனவே இன்று இன்னும் நீண்ட நேரம் பேசக் கூடிய ஒரு இலக்கிய உரையைக் கெடுத்தது - அந்தப் புண்ணியத்தைக் கட்டிக் கொண்டது பத்திரிகை அல்ல. அந்த பத்திரிகையில் வந்த செய்தி என்பதை மாத்திரம் நான் இங்கே தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

உயிர் எழுத்து - மெய்யெழுத்து உயிர் மெய்யெழுத்து

இன்று இந்த நிகழ்ச்சியை நடத்துகின்ற இந்த அமைப்பின் பெயர் 'அக்னி' என்பதில் எனக்கு சற்று கருத்து மாறுபாடு என்று சொன்னேன். ஆனால் அதை நானே ஒருவகையாக சரி செய்து கொண்டு உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன். 'அக்னி' என்ற சொல் வடமொழி எனறாலும்கூட, எழுத்துக்களை பிரித்துப் பார்த்தால் 'அ' என்ற உயிரெழுத்தும், 'க்' என்கின்ற மெய்யெழுத்தும், ன் + இ என்ற உயிர்மெய்யெழுத்தும் தமிழுக்கே உரித்தான - இலக்கணமான உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய் எழுத்து என்ற மூன்றும் சேர்ந்த கலவையாக 'அக்னி' என்ற இந்தச் சொல் உருவெடுத்திருப்பதை எண்ணும் போது, (பலத்த கைத்தட்டல்) அவர்கள் இதை எண்ணிப் பார்த்துச் செய்தார்களோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் மிகப் பொருத்தமாக இந்த சொல் அமைந்திருக்கின்றது.

மூன்று இனங்களையும் தன்னகத்தே கொண்ட தமிழ்!

'அக்னி' நடத்துகின்ற இந்த விழாவில் தமிழுக்கு ஏற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்றால் இதுமாத்திரம் அல்ல; தமிழுக்கு உள்ள பெருமை தமிழ் என்ற சொல்லே கூட நான் இப்போது சொன்னேனே, உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து என்று அதைப்போல 'தமிழ்' என்கின்ற அந்த மொழிக்குரிய சொல்லேகூட தமிழிலே சொல்லப்படுகின்ற மூன்று இனங்களையும் கொண்டது. வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய இந்த மூன்றையும் கொண்டது. கசடதபற அதில் வருகின்ற 'த' என்ற முதல் எழுத்து வல்லினம்! ஙஞணநமன - அதில் வருகின்ற 'ம', 'மி', இரண்டாவது எழுத்து மெல்லினம்!யரலவழள. அதில் வருகின்ற 'ழ' 'ழ்' தமிழுக்கு மூன்றாவது எழுத்து, இடையினம் ஆகவே மூன்று இனங்களையும் அடக்கிய ஒரு சொல் - இந்த மொழிக்குரிய சொல்.. தமிழ் என் கின்ற சொல்லாகும்.

இன்னொரு பெருமை இந்தத் தமிழை - இயல் - இசை - நாடகம் என்று மூன்றாக பிரித்து நாம் பாராட்டிக்கொண்டிருக்கின்றோம். இயல் - இசை - நாடகம் என்று சொன்னாலும் கூட முதல் வரிசையில் முதலிடத்தில்

'இன்றைக்கு 'இயல்' இருந்தாலும்கூட, உலகம் தோன்றி உயிர் இனங்கள் தோன்றி, மனிதன் தோன்றி, சமுதாய அமைப்புக்கள் தோன்றி, வளர்ந்து வந்த அந்தக் காலக் கட்டத்தில் நிச்சயமாக 'இயல்' முதலிலே இருந்திருக்க முடியாது. 'இசை' முதலிலே இருந்திருக்க முடியாது. 'நாடகம்' தான் முதலில் இருந்திருக்க முடியும். எப்படி என்று கேட்டால் மனிதன் தன்னுடைய தேவைகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்கிற நேரத்தில் கை அசைவுகளால், அபிநயங்களால், அது வேண்டும், இது வேண்டும் - தலையை வலிக்கிறது என்றால் தலையை பிடித்துக் காட்டியும், கை வலிக்கிறது என்றால் கையைப் பிடித்துக் காட்டியும், கால் வலிக்கிறது என்றால் காலைப் பிடித்துக் காட்டியும், இப்படி நாடகம் ஆடித்தான் சைகைகள் மூலம்தான் ஒருவனுடைய உணர்ச்சியை இன்னொருவனுக்கு வெளிப்படுத்தியிருக்க முடியும்.

எப்போதுமே 2-ம் இடத்தில் இருந்து வரும் 'இசை'!

ஆகவே மனித சமுதாயத்தில் முதன் முதலாக இருந்தது நாடகம்தான். அதற்குப் பிறகுதான் தொலைவிலே இருப்பவர்களே அழைப்பதற்கு; "ஏ ... ஓ.... வா" என்று நீட்டி முழக்கிப் பேச அது; இசையாயிற்று. நாடகம் முதலில். இசை இரண்டாவது. இவைகளுக்குப் பிறகு தான் இன்றைக்கு நாம் பேசிக் கொண்டிருக்கிறோமே இலக்கியத்தைப் பற்றி, வேறு பல கலைகளைப் பற்றியெல்லாம் பேசுகின்றோமே அந்த இயல் மூன்றாவதாகத்தான் இருந்தது. ஆனால் அதனுடைய சாமர்த்தியம் பாருங்கள் அந்த இயல் - நாடகத்தைக் கடந்து, இசையைக் கடந்து முதலிடத்திற்கு வந்து விட்டது. இசை மாத்திரம் எப்போதும் இரண்டாவது இடத்திலேயே இருக்கிறது. அதற்கு இரண்டாவது இடம் எப்போதும் நிரந்தரம். (பலத்த கைத்தட்டல்) விளக்கத் தேவையில்லை (பலத்த சிரிப்பு).

இந்த முத்தமிழில் இன்று இலக்கியம் குறித்து பேசக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் இரண்டு கேள்விகளை எழுப்பி, மறைந்த தமிழ்ப் பேரறிஞர் டாக்டர் மு. வரதராசனார் தந்துள்ள விளக்கங்களை இங்கே குறிப்பிடுவது சிறப்புடையதாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

கலையும் - அறிவியலும்
டாக்டர் மு.வ. தந்த விளக்கம்!

கலையும் அறிவியலும் என்பதை ஒப்பிட்டுக் காட்டுகிறார். அறிவியல் என்றால் என்ன? கலை என்றால் என்ன? இரண்டும் ஒரே மாதிரி தெரிந்தாலும் ஒன்றைப் பற்றி பேசினாலும் இரண்டும் வேறுபடுகின்றன.

"ஒரு மரம் நாற்பதடி உயரம்" இப்படி ஒரு மரத்தைப் பற்றிச் சொன்னால் அது அறிவியல். ஆனால் அந்த மரத்தைப் பற்றி " வானளாவி உயர்ந்த மரம்" ஒன்று சொன்னால் அது கலை. ஒரு இலட்சம் பேர் கொண்ட கூட்டம் என்று சொன்னால் அறிவியல். "எள்விழ இடமில்லாத அளவிற்கு கூட்டம்" என்றால் அது கலை. விண்ணை இடிக்கும் தலை இமயம். அது கலை. "விண்ணென ஒன்றில்லை. அதை இமயம் இடிப்பதும் இல்லை. இமய மலை கடல் மட்டத்திற்கு மேலே இருபத்தொன்பதாயிரத்து நுற்றி நாற்பத்தொரு அடிதான் உயரம்" என்று சொன்னால் இது அறிவியல். இப்படி விளக்குகிறார் டாக்டர் மு. வரதராசனார்.

இன்னும் சொல்கிறார்; உள்ளதை உள்ளவாறு அறிவிக்க முயல்வது அறிவியல். உள்ளதை உணர்ந்தவாறு உணர்த்துவது கலை.

இதற்கு உதாரணமாகச் சொல்ல வேண்டுமேயானால் ஒரு பெண்ணைப் பற்றி எடுத்துக்கொள்வோம். மு.வ. கூற்றுப்படி கலையிலே ஒரு பகுதியை உணர்த்தினால் போதும். கற்பனையின் ஆற்றலால் முழுதும் விளங்கிவிடும். ஒரு பெண்ணைப் பற்றிச் சொல்லும்போது அவள் ஒரு மயில் என்று சொன்னாலே, அந்த வர்ணனையிலேயே - மிக அழகானவள். பார்ப்பதற்கு கவர்ச்சி நிறைந்தவள். நம் இதயத்தை ஈர்க்கக் கூடியவள் என்ற இவ்வளவு எண்ணங்களும் வெளிப்பட்டு விடுகின்றன.

அறிவியலில் சொல்ல வேண்டுமேயானால், அவள் அழகான பெண் என்று சொல்லி அதோடு நிறுத்த முடியாது. அவள் எத்தனை அடி உயரம், என்ன நிறம், கண் எப்படி? என்ன உடை? எப்படிப் பேசுகிறாள்? இவ்வளவும் சொன்னால்தான் அறிவியல்படி ஒரு பெண்ணைப் பற்றிய வர்ணனை முடிவுறும்.

கலையில் எல்லா பகுதிகளையும் விளக்கினால் சுவை குன்றிவிடும். மயில் என்று சொன்னதோடு நிறுத்த வேண்டும். அவள் ஆடும் மயில் என்று சொன்னால் அவ்வளவு அழகானவள் என்று நினைத்துக்கொள்ளலாம். அதை ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தால் தோகை உள்ள மயில் எது என்றால் பெண் மயில் அல்ல. அது ஆண் மயில்தான். (பலத்த சிரிப்பு) அங்கேயே பெரிய முரண்பாடு வந்துவிடும்.

உணர்ந்ததை திரும்பத் திரும்ப உணர்ந்து இன்புறச் செய்யும் கலை!

எனவேதான் கலையில் எல்லாப் பகுதிகளையும் விளக்கினால் சுவை குன்றும். மயில் ஆணா, பெண்ணா என்று தெரியாமலே பெண் மயில்தான் என்று எண்ணிக் கொண்டு தோகை விரித்த மயிலை பெண்ணுக்கு ஒப்பிடுவது சரிதானா என்ற கேள்வி எழுந்துவிடும். எனவேதான் அப்படிப்பட்ட உவமைகளை உவமைகளோடு நிறுத்த வேண்டும். அதற்கு மேலே செல்லக் கூடாது. ஒரு முறை ஆராய்ந்து அறிந்த பிறகு மீண்டும் அதையே அறிவதில் ஆர்வம் இல்லாமல் செய்வது அறிவியல். ஒரு முறை உணர்ந்ததையே திரும்பத் திரும்ப உணர்ந்து இன்புறுமாறு தூண்டுவது கலை.

மனித வாழ்வில் அறிவின் பங்கும், உணர்ச்சியின் பங்கும் உண்டு, முக்கியமாக ஒன்றைக் கவனிக்க வேண்டும். அறிவு பெருகி உணர்ச்சி குன்றியவர்கள் மரம் போன்றவர்கள்.

'அரம்போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்
மக்கட் பண்பு இல்லாதவர்'

என்றார் வள்ளுவர். உணர்ச்சி பெருகி அறிவு குன்றியவர்கள் விலங்கு போன்றவர்கள். இப்போது பார்க்கின்றோமே காவல் நிலையங்களில் விலங்குகள் போன்ற சிலரை! எனவே அறிவு பெருகி உணர்ச்சி குன்றியவர்கள் மரம் போன்றவர்கள். உணர்ச்சி பெருகி அறிவு குன்றியவர்கள் விலங்கு போன்றவர்கள்.

கலையை பல வகையாகப் பிரிக்கிறோம். ஓவியம், சிற்பம், இசை, நாட்டியம், நாடகம், இலக்கியம் என்று பல வகையாகப் பிரிக்கும்போது ஓவியம், சிற்பம், இசை, நாட்டியம்ஆகிய கலைகளை பொதுவாக எல்லா நாட்டுக்காரர்களும் நுகர

முடியும். ஓவியத்திற்கு மொழி கிடையாது. எனவே அதனை எல்லோரும் பாராட்டலாம், ரசிக்கலாம். சிற்பம்; அதற்கும் மொழி கிடையாது. எல்லோரும் பாராட்டலாம். கலாச்சாரம் உண்டு. ஆனால் அதற்கு மொழி கிடையாது. இசை; அதற்கும் மொழி கிடையாது. மொழிக்குத்தான் இசை வேண்டும் என்று போராடுகிறோம். தமிழ் இசைக்கு போராடுகிறோம். நாட்டியம்; அதற்கும் மொழி கிடையாது. அதனால் அதனை எல்லா நாட்டுக்காரர்களும், எல்லா மொழிக்காரர்களும் நுகர முடியும்.

என்றென்றும் 'சாகாவரம்' பெற்றது இலக்கியமே !

நாடகக் கலையை மொழி தெரியாதவர்கள் அந்த அசைவுகளை மாத்திரம் வைத்து பாதி உணரலாம். பாதி உணர முடியாது. இலக்கியக் கலை இருக்கிறதே இது முழுதும் சொற்களால் ஆனது. எனவே இலக்கியக் கலை இடத்தால் வரையறுக்கப்பட்டது. மொழி பயின்றவர்கள் மாத்திரம்தான் உணர முடியும். இசை, நாட்டியம், நாடகம் அவ்வப்போது தோன்றி பலனளித்து மறையக் காணலாம். ஓவியமும், சிற்பமும் நெடிது நாள் வாழ்ந்தாலும் ஒரு காலத்திலே அழியக் கூடியவை என்பதை உணரலாம். இலக்கியமோ ஏடுகளே அழிந்துவிட்டாலும் மக்கள் மனதில் என்றென்றும் குடி கொண்டிருக்கக் கூடியவை! எனவே இலக்கியம்தான் சாகாவரம் பெற்றது.

கலைகளில் சிறந்தது இலக்கியம் !

இப்படி வேறுபட்ட போதிலும் இந்தக் கலைகள் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டவை என்பதை அறிஞர்கள் விளக்குகின்றார்கள். மனிதன் படைத்துக் கொண்ட நாகரீகக் கருவிகளில் மிகச் சிறந்தது மொழி என்பது. மொழி இல்லையாயின் இன்றைய நாகரீக வளர்ச்சியே இல்லை. மக்கள் சேர்ந்து பழகவும், அமைப்புக்கள் ரீதியாக இயங்கவும், மன்றங்கள் தோன்றவும், நீதிகள் வழங்கவும், சமயங்கள், சட்டங்கள் உருவாகவும், அரசு, நாடு, உலக உறவு, வாணிபம், நூல்கள், அறிவியல் எல்லாவற்றுக்கும் மொழியே அடிப்படை. அத்தகைய மொழியை மொழிகளின் சொற்களையே ஊடுபொருளாகக் கொண்டு அமைவது இலக்கியம். ஆகையால் அது கலைகளில் சிறந்தது என்பது பொருந்தும் என்கிறார் டாக்டர் மு.வ.

இலக்கியம், செய்யுள் வடிவாகவும் அமையும், உரைநடையாகவும் அமையும். உரைநடையாக, நாடகமாக, தொடர் கதையாக, சிறு கதையாக, கட்டுரையாக அவைகள் அமையும். அதுதான் தற்காலத்திற்கும், இடைக்காலத்திற்கும் உரிய தமிழாக நம்முடைய மொழியைப் பொருத்த வரையிலே இருந்திருக்கிறது.

சங்க இலக்கியங்கள் - அவை என்றும் சாகா இலக்கியங்கள் !

ஆனால் சங்க காலத்தில் இந்த இலக்கியம் செய்யுள் வடிவில் அமைக்கப்பட்ட இலக்கியங்களாக மட்டுமே இருந்தன. ஆனால் அவை இன்றும் சாகாத இலங்கியங்களாக இருக்கின்றன.

இந்த சங்க இலக்கியங்கள் இரண்டு துறைகளாக பிரிக்கப்படுகின்றன. எத்தனை நூல்கள் இருந்தாலும், எத்தனை தொகைகள் அதில் சொல்லப்பட்டிருந்தாலும், எத்தனை பாட்டுக் கள் பகிர்ந்தளிக்கப்பட்டாலும் மொத்தத்தில் இரண்டே பிரிவு தான். அகத்துறை, புறத்துறை என்ற இரண்டே பிரிவுகள் தான்.

அகமும் - புறமும் அண்ணா தந்த விளக்கம் !

ஒன்றை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். இருபத்தைந்து, முப்பதாண்டுகளுக்கு முன்பு காரில் பேரறிஞர் அண்ணா அவர்கள் முன்னிருக்கையிலும், நானும், பேராசிரியர் அன்பழகனார் அவர்களும் பின்னிருக்கையில் அமர்ந்து ஒரு நீண்ட தொலைவு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தோம். இரவு நேரம் நானும், பேராசிரியர் அன்பழகனார் அவர்களும் இந்த அகத்துறையை, புறத்துறையைப் பற்றி சர்ச்சையில் ஈடுபட்டு ஏறத்தாழ ஒரு மணி நேரத்திற்கு மேலாக என்னுடைய கருத்துக்களை அவர் சிலவற்றை ஆமோதித்தும், அவருடைய கருத்துக்கள் சிலவற்றை நான் ஆமோதித்தும் அதைப்போல இருபாலரும் எதிர்த்தும் வாதாடிக் கொண்டு சென்றோம். நீண்ட நேரம் மவுனமாக இதை கவனித்துக் கொண்டே வந்த அண்ணா அவர்கள் அமைதியாக மெல்ல பின்னால் திரும்பி, "ஏனப்பா இதற்கு இவ்வளவு தகராறு பண்ணிக்கொண்டு வருகிறீர்கள். அகம் என்றால் என்ன? புறம் என்றால் என்ன? என்பதற்கா இவ்வளவு ஆராய்ச்சி? பகிர்ந்து கொள்ளக் கூடியது புறம்; பகிர்ந்து கொள்ள முடியாதது அகம்!" (பலத்த கைத்தட்டல்)

என்று இந்த இரண்டே சொற்றொடரில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அதை விளக்கினார். புறம் பகிர்ந்து கொள்ளக் கூடியது. அகம் பகிர்ந்து கொள்ள முடியாதது. இதை விளக்கத் தேவையில்லை. அதை பகிர்ந்து கொள்வது நாகரீகக்கேடு. (பலத்த கைத்தட்டல்) பண்பாட்டுக் கேடு. எனவேதான் அண்ணா அவர்களுடைய அந்த சொற்றொடரை இன்றைக்கும் எண்ணி எண்ணி நான் மகிழ்ந்து கொண்டிருக்கிறேன்.

அந்த அகம், புறம் என்று நாம் எண்ணிப் பார்க்கும்போது புறப்பாடல்களில் சிலருடைய பெயர்கள், சங்க இலக்கியத்தில் சில தனிப்பட்டவர்களுடைய பெயர்கள் சுட்டிக்காட்டப் பட்டாலும்கூட, அவர்களுடைய இன்ப, துன்பங்களையும், விருப்பு வெறுப்புக்களையும், நல்லது கெட்டதுகளையும் அனைவருக்கும் பொதுவானவைகளாகவே கொண்டிருகின் றார்கள். அகப் பாடல்கள் பெரும்பாலானவை தனிப்பட்ட வர்களுடைய பெயர்கள் அதிகம் சொல்லப்படாமல் பொதுவாக விளங்க வேண்டும் என்பதற்காக தலைவன், தலைவி என்று பெயர் குறிப்பிடப்படாமலேயே பாடப்பட்டவைகளாகும். ஆனால் அந்தப் பெயர்களை தற்காலத்திலே நாம் ஒரு கதைக்காக, ஒரு குறுங்காவியத்திற்காக பயன்படுத்துகிறோம்.

'ஒரு தலைக் காதல்' என்ற பெயரில் நான் தீட்டிய குறுங்காவியம் !

என்னைப் பொறுத்தவரையிலேகூட நற்கண்ணை என்ற ஒரு பெண்பாற் புலவர் சோழன் பெருநற்கிள்ளி என்பவன் மீது கொண்டிருந்த அன்பை வைத்து இருவருக்கும் இடையே ஒரு காதல் முடிச்சைப் போட்டு புலவர் சாத்தந்தை என்பவர் எழுதிய ஒரு செய்யுளின் ஆதாரத்தை வைத்து ஒரு குறுங் காவியத்தையே நான் எழுதியிருக்கிறேன்" ஒருதலைக்காதல்" என்ற பெயரால்.

இங்கே வீற்றிருக்கின்ற தம்பி கவியரசு வைரமுத்து "வில்லோடு வா நிலவே" என்ற ஒரு குறுங்காவியம், நூலாக வெளியிட்டிருக்கிறார். அதிலே ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் இவர்கள் இருவரிடையே வளர்ந்துள்ள அன்பையும், நெருக்கத்தையும் வைத்து ஒரு காதல் கதை பின்னி வெகு அழகாக அதை தமிழகத்திற்கு வழங்கியிருக்கிறார்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் சங்க காலத்து எழுத்துக்கள், தமிழ், அதிலே வருகின்ற செய்யுள் அத்தனையும் பொதுவாக எல்லோராலும் போற்றக் கூடிய, பின்பற்றக் கூடியனவாக இருக்கின்றன. தனி நபர்களுடைய வாழ்க்கையை மாத்திரம் சித்தரிப்பவைகளா அவைகள்? இல்லை என்பதற்காகச் சொல்லுகின்றேன். உணர்ச்சி உருவாகவே நின்று பிற உயிர்களின் துன்பத்தை, மகிழ்ச்சியை, அவற்றின் உணர்ச்சிகளை கற்பனை செய்து அந்தக் காலத்திலே பாடியிருக்கின்றார்கள்.

நான் தொடக்கத்திலே சொன்னேன் சங்க காலத் தமிழ் எவ்வளவு கரடு முரடானது என்பதைக் குறிப்பிட்டேன். இரண்டு வரிகளைச் சொல்கிறேன்.

"பகன்றை வான்மலர் மிடைந்தக் கோட்டைக்
கருந்தாள் எருமைக்கன்று வெரூஉம்"

இதில் உங்களுக்கு ஏதாவது புரிகிறதா? இது சங்க காலத் தமிழ். இதன் பொருள் என்னவென்றால் - பகன்றை என்ற ஒருவகையான கொடி படர்ந்திருக்கின்ற புதரில் எருமை மாடு மேயச் சென்று, அந்த புதருக்குள்ளே இருக்கின்ற மேய்ச்சலுக்குத் தேவையான புல் - பூண்டுகளை அது உண்ணுகிற நேரத்தில் அந்த பகன்றைக் கொடி அதன் இரண்டு கொம்புகளில் சுற்றிக் கொள்கிறது. கொம்புகளில் சுற்றிக் கொண்ட பகன்றைக் கொடியோடு எருமை தொழுவத்திற்கு வருகிறபோது அதன் கன்றுக்குட்டி தாய் என்று அடையாளம் தெரியாமல் மிரண்டு ஓடுகிறது. இதை இரண்டே வரிகளால் எவ்வளவு அழகாக அந்த நிகழ்ச்சியை அந்தக் காலத்துப் புலவன் பின்னியிருக்கிறான் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

"பகன்றை" ஒரு கொடி, "வான்மலர் மிடைந்த கோட்டை" கொம்பில் "கருந்தாள் எருமை" எருமையானது வர "கன்று "வெரூஉம்" வெரூஉம் என்றால் என்ன? தற்காலத் தமிழில் மிரளும்; இடைக்காலத் தமிழில் அஞ்சும். சங்க காலத் தமிழில் வெரூஉம்? (பலத்த சிரிப்பு)

இத்தகைய இந்த சங்க காலத் தமிழினை எளிமையாக்கி மக்களுக்குத் தரவேண்டும்; இனிமையாக்கி மக்களுக்குத் தரவேண்டும்! அதனுடைய உட்பொருள் அனைத்தையும் தமிழ் மக்கள் உணர வேண்டும்; இளைஞர்கள் உணர வேண்டும்;

தமிழ் மாணவர்கள் உணர வேண்டும் என்கின்ற பேரவா காரணமாக நான் எழுதியதுதான் சங்கத்தமிழ் என்பதை அறிவீர்கள்.

இங்கே நான் ஆற்றுகின்ற உரையில் உலகம், நாடு, மக்களுடைய வாழ்க்கை, வீரம், காதல், இரங்கல் இந்த உணர்ச்சிகளைப் பற்றி சங்க காலத் தமிழ் எப்படியெல்லாம் நமக்கு பயன்படுகிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகின்றேன்.

இந்திரா காந்தி - ரஷ்யாவில் எடுத்துக்கூறிய தமிழ்ப்பாடல்!

ஒரு பாடல்; உலகத்தையே ஒன்று; அதிலிருக்கிற மக்களெல்லாம் நமது உறவினர் என்று அறிவிக்கின்ற பாடல். அந்தப் பாடலை மறைந்த முன்னாள் பிரதமர் அன்னை இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் சோவியத் நாட்டுக்கு சென்றபோதுகூட அங்கு எடுத்துக் காட்டினார்கள் "எங்கள் நாட்டில், தமிழகத்தில் இப்படி ஒரு அருமையான பாடல் இருக்கிறது" என்று கூறி.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற அந்தப் பாடலை இந்திராகாந்தி அங்கே எடுத்துக் காட்டினார். ஆனால் தமிழகத்தின் மாணவன் அதை எப்படி படித்துக் கொண்டிருக்கிறான்; இளைஞன் எப்படி உணர்ந்திருக்கிறான்? "யாதும் ஊரேயாவரும் கேளிர்" என்றால் என்ன சொல்கிறான்? எல்லா ஊரும் நமது ஊருதான்; உலகம் நம்முடையதுதான். அது சரி; "யாவரும் கேளிர்" என்பதை "எல்லோரும் கேளுங்கள்" என்கிறான். (பலத்த சிரிப்பு)

அதற்கு அதல்ல பொருள்; யாதும் ஊரே - எல்லா ஊரும் நம்முடைய ஊரே! யாவரும் கேளிர்; கேளிர் என்றால் உறவினர். இதுதான் சங்க காலத் தமிழில் ஒரு சங்கடம். கேளிர் என்றால் இதுபோன்ற ஒரு இடத்தில் உறவினர் என்று பொருள் இன்னொரு இடத்தில் பகைவர் என்று பொருள். கேளிருக்கே இரண்டு பொருள் இருக்கிறது.

தமிழில்தான் ஒரு சொல்லுக்கு பல பொருள்கள் உண்டு. நாம் மறந்து விடக் கூடாது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற இந்தப் பாடல் கணியன் பூங்குன்றன் என்ற புலவர் பெருமான் எழுதியதாகும்.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர் தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;
காதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்
இன்னாது என்றலும் இலமே; மின்னொடு
வானம் தண் துளி தலைஇ, ஆறாது
கல்பொருது இறங்கும் மல்லற் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல, ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே;

இங்கே அம்ர்ந்திருக்கின்ற மிகப் பெரிய புலவர்களைத் தவிர மற்றவர்கள் யாரும் இதற்கு பொருள் புரிந்து சுவைக்க முடியாது. எனவே இதனை எளிய தமிழில் நான் அமைத்து ஏற்கனவே வெளியிட்டேன்.

கணியன் பூங்குன்றன் கவிதை
இதோ - எனது தமிழில்!

“மூன்று கூறாக ஆவதற்கு முன்பிருந்த
முகவைப் பெரும் மாவட்டத்தில் மூதறிஞர்
பண்டிதமணி
கதிரேசன் செட்டியார் பிறந்தார் எனக் கேள்வியுற்று
களிப்புடனே மகிபாலன் பட்டிக்கு சென்றிருந்தபோது
பூங்குன்றமென பழைய நாள் இலக்கியமாம்
புறநானூற்றுக் குறிப்பில் இருந்த ஊரின் பெயர்தான்
மகிபாலன்பட்டியாக
மாறிற்றென்று, பெரும்புலவர் வ.சுப.
மாணிக்கனார் உரைக்கக் கேட்டு
மகிழ்ச்சியிலே திளைத்துப் போனேன்.
கணியன்பூங்குன்றனார் எனும் அவ்வூர்க் கவிஞன்
கற்குகை ஒன்றில்செதுக்கியுள்ள கவிதை யினைக்
காண வாரீர் என அழைத்திடவே சென்று
கண்டேன்! அந்தப்

பழம்புலவன் கரங்கொண்டு செதுக்கியதோ அன்றி
பார் புகழும் அப்பாட்டைப் பின்வந்தோர் செதுக்கியதோ?
யார் செயலாய் இருந்திடினும் அப்பாட்டில்
"யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும்
அறைகூவல்தனை அற்றை நாளில் ஒரு தமிழன்
நிறைகுடமாய்த் திகழும் தன் நெஞ்சத்தைத் திறந்து காட்டி
விரிகடல் சூழ் உலக முழுதும் நம் ஊரே என்றும்
விழியும் ஒளியும் போல் மக்கள் எலாம் நம் உறவே
என்றும் - புதிய
வெளிச்சத்தால் பொல்லாத இருள் கிழித்து
வேற்றுமையின் வேரறுத்துப் புரட்சி செய்தான்.
பூத்தமிழில் வண்டாகப் புணர்ந்து கலந்து - இந்தப்
பூமிக்கே பொதுக் கவிதைக்கனியொன்றைத் தந்த கவிஞன்
பூங்குன்றந்தனில் பிறந்த புலவன் கணியன்தான்
என்கின்றபோது
புல்லரித்துப்பூரித்துப் போகுதம்மா நம் எண்சாண் உடம்பு!
அந்நாளில் புலவரெல்லாம் அகிலத்தை ஆளுகின்ற
அரசர்களின் அவைக்களத்தில் அரிய தமிழ்க்கவிகள் பாடி
ஆனை என்றும் சேனை என்றும் ஆயிரம்
பொற்கிழிகள் என்றும்
மானியங்கள் மற்றும் பல பரிசில் என்றும் மலை மலையாய்
பெற்றிடுவர்!
இந்நாளில் சில புலவர் போல் வாழ்வோர்க்கு
வாழ்த்துரைத்து
இன்னலுற்று அவர் தாழ்வாராயின் அக்கணமே சிறகடித்து
அற்றகுளத்துப் பறவைபோல அடுத்த குளம் பார்க்கின்ற
இயல்புடையார் அப்போதும் சிலர் இருந்திடத்தான்
செய்தார்கள்!
கணியன் பூங்குன்றனோ; அவர் கண்டு கவலை மிகக்
கொண்டதனால்
அணிமணிகள் தமிழில் செய்து அரசர்க்கும் வள்ளல்கட்கும்
பூட்டி மகிழ்வதிலே ஆர்வமொரு கடுகளவும் காட்டாமல்
இருந்திடவே
நீட்டி முழக்கிச் சில பேர்: "அரசை அணுகிப் பரிசு பெறப்
பாடல்கள் இயற்றிடுக"! எனக் கேட்டபோது கணியன்

பக்குவமாய் விடையளித்து அவர் விருப்பத்தைத் தட்டிக்
கழித்தான்
அந்தப் புலவர்களைப் பார்த்து கணியன் பூங்குன்றன்
சொன்னான்:
“நாடு பற்றிப் பாடுகின்றீர் - நன்று! நன்று!
நாடாளும் மன்னர் பற்றி பாடுகின்றீர் - அதுவும் நன்று
நாடுதனை மீட்பதற்கும் புதிதாகப் பறிப்பதற்கும்
கேடுகளைச் சுமந்து விழுப்புண்கள் ஏந்துகின்ற
பீடுநடை வீரர் பற்றிப் பாடுகின்றீர் மிகவும் நன்று
ஏடு கொள்ளா இலக்கியங்கள், காதலையும்
களம்புகுவோர் காதையையும்
எடுத்தியம்பும் காரணத்தால் என் வழியைத் தனிவழியாய்
ஆக்கிகொண்டு எல்லா ஊரும் எமது ஊரே
எல்லா மனிதரும் எமது உறவே - என எழுதத்
தொடங்குகிறேன்” என்றான்!
நற்றிணையில் வருகின்ற காதல் பாட்டொன்றைக் கூட
கற்றறிவாளன் கணியன் பூங்குன்றன் எழுதுங்கால்
“மருந்துக்கு உதவுகின்ற மரத்தின் பட்டைகளை மட்டுமின்றி
அந்த மரத்தையே வேரோடு பிடுங்குவதோ”?எனக்
கேட்டு
பயன்படுவன எதனையும் பாதுகாக்க வேண்டுமெனப்
பாங்காக அறிவுரையைப் பகருகின்றான் உலகிற்கு!
“ஓரே உலகம்” எனும் கொள்கைதனை - மனிதரெல்லாம்
“ஓரே குலம்” எனும் தத்துவத்தைப் புவியில்
கல்தோன்றி மண் தோன்றா காலத்திற்கு
முன் தோன்றிய மூத்த குடிப் பிறந்த தமிழ்க்
கணியன் பூங்குன்றன்; கவிதை நடைச்
சொல்லூன்றி நிலை நாட்டுகின்றான்
விதிப்பயனே எல்லாம் என்றுரைத்துச் சோர்ந்து
கதியற்றுக் கன்னத்தில் கைவைப்போர்தனைப் பார்த்து
“நன்மைக்கும் தீமைக்கும் காரணங்கள்
நமது செயல்களேயன்றி பிறரல்ல” என்றும்
“யாதும் ஊரே யாவரும் கேளிர்”
தீதும் நன்றும் பிறர் தர வாரா”
தீமையும் நன்மையும் மற்றவர்கள்

கொடுத்து வருவதல்ல; நன்மைக்கும்
தீமைக்கும் காரணங்கள் நமது
செயல்களேயன்றி பிறரல்ல என்றும்
நயம்பட உரைக்கின்றான் அந்த நற்றமிழ்ப் புலவன்.
அம்மட்டோ?
வேதனைகள்விரைந்து தொடர்வதும் - அவை
விலகித்தொலைந்து போவதும்கூட
நாம் ஏற்றிடும் செயல்களால் - என்றே
நன்கு கணித்து நவில்கின்றான் கணியன்
பிறந்த உயிர்கள் இந்த மண்ணில்
இறந்து மறைதல் புதிதுமல்ல;
இன்பமொன்றுக்காகவே வாழ்க்கை என்பதும்
துன்பம் வந்திடின் வாழ்வை வெறுப்பதும்
உறுதிகொண்ட மாந்தர்தம்
குணத்திற்கேற்ற உயரிய செயலுமல்ல!
ஆற்றொடு போகும் தெப்பம் போல
ஆடியும் அசைந்தும் அமைதி கண்டும்
ஆருயிர்ப் பயணம் அவனியில் நடக்கும். எனவே
ஆன்றோர் காட்டிய அரிய வினைகளைத் தொடர்க!"
இன்னொன்றும் சொல்கின்றான்.
"செழிப்பில் திளைத் தோர்க்கு சிரம் தாழ்த்தலுமில்லை
சிறியோர் எனப்படுவோரை
இகழ்ந்துரைத் தலுமில்லை"
"உலக ஒற்றுமை, ஒரு குலக் கொள்கை,
உயிரின் தன்மை, உயரிய வினைகள் வாழ்வில்
உற்ற துன்பமும், உவகையின்பமும் ஒன்றெனச் கருதுதல்,
உயர்ந்துள்ள செல்வர்க்கு பணியாமை - வீணில்
உழன்றிடும் சிறியோரை இகழாமை; எனப் பல
வண்ணமிகு மலர்கள் கொண்டு - உயர்
எண்ணங்களைத் தொடுத்தளிக்கும் பெரும்
உள்ளம் காணுகின்றோம் இந்தக் கவிதையினில் புது
வெள்ளம் போல் இக்கருத்து பரவட்டும்; காசினியில்!
ஆனால் ஒன்று;
ஊரெல்லாம் இணைந்து ஒருலகாய்
ஆவதென்பதும்

உறவு கொண்டே மனிதகுலம் ஒன்றே
எனத் திகழ்வதும்
உயரிய குறிக்கோளாம் என்றுரைத்த புலவன்கூட
தனது ஊரை மறவாமல் பூங்குன்றமென இணைத்தே
கணியன் பூங்குன்றன் எனும்
கவிஞனாய் உலவியதை கவனமுடன்
எண்ணிப் பார்த்தால் - அந்த மாமனிதனையும்
மண்ணின் பற்று விடவில்லை என்பதுதான்
உண்மையன்றோ?

கணியனையும் விடவில்லை மண்ணின் பற்று!

ஒரே உலகம் என்றான்; எல்லாம் ஒரே மனித குலம் என்று சொன்னான். ஆனால் அவன் பெயரில் கணியன் பூங்குன்றன் என்று ஊர்ப்பெயரைச் சேர்த்து வைத்துக் கொண்டான். இப்போது கூட நீங்கள் பார்த்தால் தெரியும்; எல்லோருக்கும் அந்த எண்ணம் உண்டு. கிரிக்கெட் போட்டி நடக்கிறது. அது ஆஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்கும் நடந்தால் தொலைக்காட்சியில் பார்க்கிறோம். யார் ஜெயித்தால் என்ன? யார் நன்றாக விளையாடுகிறார்கள் என்றுதான் பார்க்கிறோம்.

ஆனால் இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் நடந்தால் இந்தியா வெற்றி பெற வேண்டும் என்று நினைக்கிறோம். அப்போது நமது நாட்டுப்பற்று வந்து விடுகிறது. அப்புறம் இந்தியாவுக்குள்ளே இருக்கிற டெல்லிக்கும் சென்னைக்கும் போட்டி நடந்தால் சென்னை வெற்றி பெற வேண்டுமென்று நினைக்கிறோம். எனவே இப்படி அகன்ற பரந்த ஒரு எண்ணம் குறுகிய அளவிலே வரும்போது மண்பற்று வந்து விடுகிறது அதைத்தான் "யாதும் ஊரே யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்ற இந்தப் பாடல் மூலமாக கணியன் பூங்குன்றன் உலகத்தையும் மக்களையும் நமக்கு ஒரு காலக் கண்ணாடியாக காட்டுகின்றான்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நக்கீரர் சொன்ன பொதுவுடமை கருத்து!

உலகத்தைச் சொல்லிவிட்டேன்; மக்களைச் சொல்லிவிட்டேன். அந்த மக்கள் எப்படி இருக்கவேண்டும்

என்பதைப் பற்றி இன்னொரு புலவர் நக்கீரனார் புறநானூற்றில் பாடுகின்றார். அடிக்கடி நீங்கள் கேள்விப்பட்ட கவிதை வரிதான்.

"உண்பது நாழி; உடுப்பது இரண்டே"
இது எந்தப் பாடலில் வருகின்ற வரிகள் என்றால்
"தென்கடல் வளாகம் பொதுமைஇன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப்பார்க்கும் கல்லா ஒருவர்க்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக் கும்பே;
செல்வத்துப் பயனே ஈதல்;
துப்பேம் எனினே; தப்பு ந பலவே"

ஒருவன் வேந்தனாக இருந்தாலும் சரி; அவன் காட்டிலிருக்கின்ற முரட்டு மிருகங்களை வேட்டையாடுகிற முரட்டு மனிதனாக இருந்தாலும் சரி: இந்த இருவருக்கும் தேவையானது நாழி உணவுதான்; நாழி என்பது தானியத்தின் அளவை அளக்கின்ற கருவி! வேந்தனுக்கும்அதுதான்! வேடனுக் கும் அதுதான்! அது போல உடுப்பதும் இரண்டேதான்! மேலே மூடிக் கொள்ள ஒன்று; கீழே மூடிக்கொள்ள ஒன்று, இரண்டே உடைதான்!

எளிய தமிழில் நான் தீட்டிய நக்கீரர் கவிதை!

இந்த மிகப்பெரிய பொது உடமைக் கருத்தை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நக்கீரனார் புறநானூற்றுப் பாடல் மூலம் விளக்கியிருக்கிறார் என்பதை எளிய தமிழிலே நான் தந்திருக்கின்றேன்.

'மந்த மாருதத் தாலாட்டில் உறங்குவதற்கு
மாட மாளிகை கட்டி வாழ்கின்ற பெரியீர்!
பணம் பணம் பணமென்று பாட்டாளியின்
வியர்வையிலே
தினம் தினம் குளியல் நடத்திக் குவிக்கின்றீர் செல்வத்தை!
பிணம் தின்னும் கழுகு போல நீவிர்;
பெருக்க வைக்கின்றீர்உமது வயிற்றை!
இருள் சூழ்ந்த வாழ்க்கையிலே ஏழைகளைத் தள்ளிவிட்டு
பொருள்தேடி அலைகின்றீர்; போதுமென்ற மனமின்றி!

வாழ்வில் வளம் பெருக்கல் ஒன்றையே குறிக்கோளாய்க்
கொண்டோரே;
வார்த்தையொன்று கேட்கின்றேன் பதில் சொல்வீர்!
மாணிக்கப் பொரியலும் மரகதக் கூட்டுமா
இலையிலிட்டு உண்கின்றீர்?
வைரத்தால் வறுவல் செய்து வைடூர்ய அவியலுடன்
முத்துப் பவளமெனும் மணிகளினால் செய்திட்ட
அரிசியையா
குத்தி உலையிலிட்டுக் குடற்பையை
நிரப்புகின்றீர்?

என்றதொரு கருத்தமைந்த கேள்வியினைக்
குன்றமெனச் செல்வம் குவிக்கின்ற மனிதரிடம்:
மன்றமேறி அறிஞர் அண்ணா கேட்டார் - அதனை
மறவாமல் என்றும் நாம்கேட்கின்றோம்!
பொதுமை மணம் கமழவேண்டும் என்று;
புவியில் நாம்முழங்குகின்றோம் இன்று!
புதுமையல்ல இம் முழுக்கம்; புலவர் பிரான் நக்கீரர்;
புறப்பாடலொன்றில் பொதுமை முரசம்
ஆர்க்கின்றார்; கேளீர்
தென் கடல் சூழ் தரணி முழுவதுமே தன்
வெண்கொற்றக் குடையின் கீழ் வரவேண்டுமெனத்
தனியுரிமை நிலைநாட்டத் துடிக்கின்ற வேந்தனுக்கும்,
கனிசுவைக்கக் கல் எறிந்து வீழ்த்துதல் போல்
காடகத்தில் விலங்குகளை வேட்டையாட
கண்ணுறக்கமின்றிப் பகலிரவு பாராமல் அலைகின்ற
கல்வியறிவற்ற முரட்டு மனிதனுக்கும்,
மானம் காத்திட அவர் தம் உடலுக்குக்
கீழும் மேலும் இரு உடைதான் வேண்டும்! - அவரை
மயக்கத்ததில் ஆழ்த்தாமல் பசி நீக்க
கூழோ பொங்கலோ உண்டு களிக்க
ஆழிசூழ் இவ்வுலகில் அவரவர்க்கும் ஒரு
நாழித் தானியம் மட்டும் போதுமன்றோ?"

தொகுத்தளித்தார் இக்கருத்தை நக்கீரர். அதைத் தொடர்ந்து அளித்து வந்தார்; தொல்புவியில் நல்லோரெல்லாம். இது உலக மக்கள் எப்படி சமத்துவமாக வாழ வேண்டும்

என்பதற்கு சங்க காலத்துப்புலவன் வரைந்து காட்டிய சொல்லோவியம்.

ஒரு நாடும் - ஆட்சியும் எப்படி இருக்க வேண்டும்!

இன்னொன்று ஒரு நாடு - ஆட்சி - ஒரு குடும்பம் - ஒரு வீடு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு அருமையான பாட்டு.

பிசிராந்தையார் என்ற ஒரு புலவர்! அவரை புலவர் குழுவில்உள்ள சில புலவர்கள் சில கேள்விகளை கேட்கின்றனர். "உங்களுக்கு அறுபது வயதுக்கு மேலே இருக்கும் தலைமுடி நரைக்கவில்லையே ஏன்"? என்று கேட்கின்றனர். அவர் பதில் சொல்கின்றார்.

முதலில் நான் எழுதிய எளிய நடையிலேயே
சொல்லிவிடுகின்றேன்:-

"நாத்திறம் கொண்ட நற்புலவர் கூட்டமதில்
பாத்திறம் காட்டிப் பலரும் கருத்துக் கனி உதிர்த்திட்டார்.
ஒருகவிஞர் பிசிராந்தையாரை நோக்கி, புலவீர்!
கருமை நிறம் மாறாத தலைமுடியும் தாடியும்; உமக்கு
அகவை அறுபதுக்கு மேலாகியும் கூட அப்படியே
அணுக்கூட நரைக்காமல் இருப்பது எப்படியோ? எனக்
கேட்டார்

"விளக்குகிறேன் காரணத்தை கேட்பீர் அய்யா - குடும்ப
விளக்காக வாய்த்துள்ளார் மனைவி எனக்கு!
விளைவுதனைச் கழனியிலே பெருக்குன்ற
மகனோ ஒரு சிறிதும்
வளைவுதனைச் கொள்கையாகக் கொள்ளாதகாளை
அளவறிந்து அவன் பெற்றான் இருபிள்ளை; இரண்டுமே
அறிவார்ந்த அழுகு தமிழ் மழலைக் கிள்ளை!
வளமான நெஞ்சுக்குள் வாஞ்சை நிறைத்து - எனது
உளமறிந்து செயல்புரியும் ஊழியரும் உண்டெனக்கு!
சிலந்தி வலை நூலினும் மெல்லியசிறு தவறுகூட
செங்கோலின் மீது படரக் கூடாதெனச் சூளுரைத்துச்
சீலமுடன் நடக்கின்ற ஆட்சியினைப் பெற்றுள்ள
சிறப்பும் உண்டு எந்நாட்டு மக்களுக்கு
(அவர் நாட்டு மக்களுக்கு) (பலத்த சிரிப்பு)

அடியேன்பிறந்த அழகுமிகு சிற்றூர் "பிசிர்"
எனும் பதியில்
ஆன்றோரும் சான்றோரும் பெரும்பாலும் நிறைந்துள்ளார்!
இத்தனைபெருமையும் ஒரு சேரப்பெற்ற மகிழ்வால்
முத்தனைய நிறங்காட்டி என் முடியினிலே
நரைதிரை எதுவும்
முற்றுகையிடுவதற்கு முனையவில்லை - முடிய வில்லை!
கற்றறிவாளரே! கவலையில்லா வாழ்க்கையினால்
கிடைத்திட்ட பலன் இது" வென்று பகன்றிட்டார்

ஆட்சி எத்தகையது என்பதை நரையை வைத்தே நிர்ணயித்தார்கள்!

இப்படி அவர் முடியைப் பார்த்தே நாட்டிலிருக்கிற ஆட்சியை நிர்ணயிக்க முடிந்தது. ஏன் நரைக்கவில்லை என்றால் குடும்பம் நன்றாக உள்ளது; மனைவி மக்கள் நன்றாக உள்ளனர்; நாடு நன்றாக உள்ளது; ஆன்றோர் சான்றோர் உள்ளனர் என்பதை முடியைப் பார்த்து நிர்ணயிக்கமுடிந்தது! இங்கே அமர்ந்துள்ள நம்முடைய நண்பர் சோவைப்பார்த்து நிர்ணயிக்க முடியுமா! (பலத்த சிரிப்பு) அவருக்கு அந்த கவலை கிடையாது. என் முடியைப் பார்த்து நிர்ணயிக்காலம்; நம்முடைய சாவி முடியைப் பார்த்து நிர்ணயிக்கலாம்; முக்தா சீனிவாசன் முடியைப்பார்த்து நிர்ணயிக்கலாம்; நணபர் உமாபதி முடியைப் பார்த்து நிர்ணயிக்கலாம்; நல்லபெருமாள் முடியைப் பார்த்து நிர்ணயிக்கலாம்; ஒஹோ நாடு இப்படித்தான் இருக்கும் போல் இருக்கிறது என்று! (பலத்த சிரிப்பு)

சோ அதிலும் ரொம்ப கெட்டிக்காரர். முடி இருந்தால் தானே நிர்ணயிப்பீர்கள்! எனவே அவர் தலையைப்பார்த்து நிர்ணயிக்க முடியாவிட்டாலும்; அவருடைய எழுத்தைப் பார்த்து நிர்ணயிக்காலம் (பலத்த கைத்தட்டல்)

இதெல்லாம் சரி ஒரு ஆட்சி எப்படி இருக்க வேண்டும்! அதுபற்றி புலவர்களுக்குள் போட்டி.! .அந்தக் காலத்துப் புலவர்கள் அரசரைமட்டும் பாடி பரிசு வாங்கிக்கொண்டு போனவர்கள் அல்ல; நாட்டுக்காக பாடினார்கள்; நல்ல கருத்துக்களைப் பாடினார்கள். சங்க இலக்கியங்களில்

இப்படிப்பட்ட பாடல்கள் பலவற்றை நாம் நாம் தேடிப்பிடிக்க முடியும்.

அவ்வளவு அருமையான பாடல்கள் இருக்கின்றன. நான் இங்கே எடுத்துச் சொல்வது கொஞ்சம் தான் இவையன்னில் எஞ்சியுள்ளவை பலப்பல பாடல்கள் இருக்கின்றன.

நல்லாட்சிக்கு மோசிகீரனார் அளித்த விளக்கம்!

மோசிகீரனார்-முரசுக்கட்டிலில் படுத்தாரே-அந்தப் பெரும் புலவர் பாடுகிறார். ஒரு புலவருடைய அவையிலே ஏற்படுகிற ஒரு சந்தேகத்துக்குப்பதில் சொல்கிறார்.

"இன்னுயிர்க்கிணை எதுவென்றும்
என்புதோல் போர்த்த உடலுக்கு
இணைதான் எதுவென்றும் இணையிலாப் புலவர் கூட்டம்
கணைகளாய்த் தொடுத்திட கருத்துக்கள் மோதின
அவைக்களத்தில்
நெல்லும் நீரும் உயிராய் விளங்கிப் பல்லோர் உடலை
வளர்த்து
நில்லா நெடுஞ்சுவர் உயிரையும் நிலைக்க
வைத்திடுமென்றும்
நிலமாளும்வேந்தர்க்கும் அதுவே உயிராக விளங்குமென்றும்
நீருக்கும் நெல்லுக்குமுள்ள சிறப்பைச்செப்பினர் சில புலவர்
முரசு கட்டிலில் படுத்துறங்கி முடிமன்னன் கைகளாலே
அரசு மரியாதையாக வெண்சாமரம் வீசப்பெற்ற
மோசிகீரனார் எனும் புலவர் முற்றிய விவாதத்துக்கிடையே
மாசு மருவிலாக் கருத்தொன்றை வெளியிட்டார்!
"என்னருமைப் புலவர் பெருமக்காள்! இனிய
கன்னலெனத் தமிழ் வடித்துத் தருகின்ற பெரியீர்
பொன்னின் நிறம் வாய்ந்த நெல்விளையும் கழனிகளில்
புனல்பாய்ந்த விதை முளைத்து, பயிரின் வேர் நனைத்து
உழவனது வியர்வையெலாம் அறுவடைக் குவியலாகி
உண்பதற்கு வெண்சோறு பொங்குதற்கும்;
உலையிலிட நீர் வேண்டும், உண்மையது மறுக்கவில்லை!
உடல் வளர உயிர் வாழ நெல்லும் நீரும்
தேவையென்பதிலும் மாற்றமில்லை!
சிந்தனைக்கு ஒரு வாதம் வைக்கின்றேன்

சிறிதளவும் நடுமுள் நடுங்காமல் தீர்ப்பளிப்பீர்!
நாடாளும் அரசொன்று இருக்கும்போது அவ்வரசு
கேடான செயல்களுக்கும் கீழான
குணங்களுக்கும் அடிமையாகி,
நீரும்நெல்லும் இல்லா நிலையில் ஊரும்உலகும் தவித்திடும்
வகையில்

சீரும் சிறப்பும் இல்லாச் 'செங்கோல்"
செலுத்திடும் கொடுமை படைத்திடுமானால்
உடலெங்கே? உயிரெங்கே? இவ்விரண்டும்
ஒன்றைவிட்டு ஒன்றகன்று பிணமாக மாறிவிடும்.

எனவே நெல்லிருந்தாலும் நீரிருந்தாலும், அது விளைந்திருந்தாலும் அது விளையாத காலத்திலும் மக்களைக் காப்பாற்றக் கூடிய அரசன் நெல்லை விட, நீரை விட நான் இருக்கிறேன் மக்களுக்கு துணையாக என்று சொல்கிற அரசனாக இருந்தால் தான் அந்த ஆட்சி நல்லாட்சி என்று அந்தக் காலத்திலே மோசிகீரனார் பாடுகின்றார்.

நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
இதனால் யான் உயிர் என்பது அறிகை
வேன்மிகுதானை வேந்தர்க்கு கடனே"

என்கிறார் மோசிகீரனார். இது ஆட்சியைப் பற்றியது.

இன்னொருவர் பக்குடுக்கை நன்கணியார். பெயரே புதுமையாக இருக்கலாம். ஆனால் அந்த பெயருக்கு காரணத்தை அறிஞர் பெருமகன் அவ்வை துரைசாமிப்பிள்ளை மிக அழகாகக் குறிப்பிடுகிறார். பக்குடுக்கை என்று ஏன் பெயர் வந்தது என்றால் அவருக்கு அது ஊர் பேர் என்று சொல்கிறார்கள். அப்படி ஒரு ஊர் இருப்பதாக தெரியவில்லை.

பக்குடுக்கை நன்கணியார் பாடிய பாடல்!

பக்குடுக்கை என்றால் பைகளை உடையாக தயாரித்து அதை அணிந்து கொண்டிருந்தார். அவ்வளவு எளிமையான தோற்றமுடைய புலவராக இருந்தார் என்று அவ்வை துரைசாமிப் பிள்ளை சொல்கிறார். அந்தப் பாடலுக்கு அவர் எழுதிய தனிக் குறிப்பில் சொல்கிறார். "பக்குடுக்கை நன்கணியார் காலத்தே

நாட்டில் வாழ்ந்த வேந்தர்கட்கும் ஏனைய செல்வர்கட்கும் உலக வாழ்வில் பெரும் விருப்பம் தோன்றி, மெய்வலி உடையார்க்கே இவ்வுலகம் உரியது, உலகத்தில் பிறந்தார் அனைவருக்கும் பொது என்பது பொருந்தாது என்றும் சமத்துவம்-சமதர்மம் பொருந்தாது என்றும் -அவ்வரசு கெடாது பேணிக் கொள்வதற்குச் செல்வம் இன்றியமையாமையின் செல்வம் தேடுவது வலிவுடையாற்கேற்ப என்றும் கருதி அவற்றிற்கேற்ப நாளும் போரும், பொருளீட்டமுமே நினைந்தொழுகப் பண்ணிற்று. இதன் விளைவாக நாட்டில் இன்பவாழ்வுக்கு இடமில்லை யாயிற்று இதனைக்கண்டார் நம் பக்குடுக்கை நன் கணியார். "இவ்வுலகம் இனிதன்று; ஒரு மனையில் சாப்பறைமுழுங்க, ஒரு மனையில் மணப்பறை முழங்குகிறது. ஒருத்தி பூவணியால்பொற்புற்றுவிளங்க, ஒருத்தி கணவனைப் பிரிந்து கண்கலங்கி நிற்கிறாள். இவ்வாறு அமையுமாறு இவ்வுலகினைப் படைத்தவன் பண்பு அறிந்தொழுகும் பாடில்லாதவனேயாவன். இவ்வுலகின் இத்தன்மையை அறிந்தவன் இதனிடையே கிடந்து உழலவேண்டுமென்பதன்று. இதனிற் சிறந்த இன்ப உலகத்து ,இன்ப வாழ்வு காண்டலை வேண்டியவனாவான்."

என இப்பாட்டால் வற்புறுத்தலானார் என்று அவ்வை துரைசாமி பிள்ளை பின் குறிப்பு எழுதுகிறார் இந்தப்பாடலைப் பற்றி.

இதைப்படித்த பிறகு தான் அந்த பெயரிலேயே எனக்கு இன்னொரு புது சந்தேகம் வந்தது. இவருக்கு பேர் பக்குடுக்கை நன்கணியார் என்று இருக்கிறது. அதைக் கூட சரியாக அணியமாட்டார் என்பதற்காகத் தான் பக்குடுக்கையும் நன்கு அணியார் (பலத்த கைத்தட்டல்) என்று நான் எழுதிய அந்த எளிய பாடலில் சொன்னேன்.

"அடடா!
வியக்கின்றேன் மெய்சிலிர்க்கின்றேன்.
விழிவிரித்துப் புறநானூற்று இலக்கியத்தைப்
படிக்கின்றேன் பழைய நாள் தமிழகத்தில் நமைப்போலத்
துடிக்கின்ற உளத்தோடு ஒரு புலவர்,
தனியுடமையாளர்களின் ஆதிக்கம் தகர்ப்பதற்கும்

இனியொரு வாழ்வுதமக்குண்டோ என்றேங்கி
தாழ்ந்து தாழ்ந்து தாழ்ந்து வீழ்ந்து போகின்ற
தரித்திரர்கள் கூட்டத்தின் கொடும் வறுமைச்
சரித்திரத்தை மாற்றி அமைப்பதற்கும்
சங்கப் பாடலொன்றைத் தந்துள்ளார்!
பக்குடுக்கை நன்கணியார் என்பது அவர் பெயராம்.
பையொன்றை உடையாகப் பகுத்துடுத்தார் என்பதாலே
பாராட்டிப் போற்றிப் பலரும்தந்த அடைமொழிதான்
'பக்குடுக்கை' எனப் பகன்றிடுவர் சான்றோர்!"

பையாம் அந்த படுக்கையினையும் அவர் பாங்குடனே நன்கு அணியார் என்ற காரணத்தால் பக்குடுக்கை நன்கணியார் என்று பார்த்தவர்கள் பட்டம் சூட்டியிருக்கக்கூடும் என்று நான் குறிப்பிட்டேன்.

சங்ககாலத்தில் உலவிய சமதர்மப் புலவர்கள்!

அப்படிப்பட்ட சமதர்மப் புலவர்கள், பொதுவுடமையாக மக்கள் இந்த நாட்டில் எல்லா உரிமையும் பெற்றுத் திகழவேண்டும் என்ற எண்ணம் உடைய புலவர்கள் சங்க காலத்தில் இருந்தார்கள் என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

எளிய தமிழில் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் பாடல்!

அரசர்களே புலவர்களாகவும் இருந்திருக்கிறார்கள் குறிப்பாக ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடியிருக்கிறான்.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
கற்றல் நன்றே!"

உதவி செய்தும், உறுபொருள் கொடுத்தும் கற்றல் நன்றே! வேண்டிய பொருளைக் கொடுத்தும் - இப்போது எம்.பி.பி.எஸ்.சுக்கு கொடுக்கிற பொருள் அல்ல (பலத்த சிரிப்பு) இந்தப் பாடலை கொஞ்சம் விளக்கமாக எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

உரலுக்குள் நெல்மணிகள் உலக்கை பட்டு
உமிவேறு அரிசிவேறாய்ப் பிரிவது போல்

உறவுதனை விரும்பாமல் உறுமுகின்ற எதிரிகளின்
உடல்வேறு தலைவேறாய் ஆக்குகின்ற வீரனவன்;
ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்.
கூரிய வேல்முனையால் வைத்த குறி தவறாமல்
கொடும் பகைவர் குடல்கிழித்துத் தோரணம் கட்டுகின்ற
வீரியம்மிகக் கொண்ட வேந்தர் பெருந்தகையாம்
ஆரியப் படைகடந்த நெடுஞ்செழிய பாண்டியனவன்!
செந்தமிழைச் சிந்தையிலே குடிவைத்த காரணத்தால்
சீரிய நற்புலமை பெற்ற செழியர்குல வேந்தனவன்!
ஆராயாது தீர்ப்பளித்த அவசரத்தால் கண்ணகியவனைத்
"தேரா மன்னா" எனத் தூற்றியதாய்க் கதையும் உண்டு!
நீதி இறந்ததென உணர்ந்தவுடன், தன்னுயிரை - அந்த
நீதிக்கே வழங்கி அதனை நடமாட விட்டானென்று
இந்த நெடுஞ்செழிய பாண்டினைத் தான் - சேர
இளங்கோவின் சிலம்பு புகழுமெனச் செப்பிடுவர்!
இம்மன்னன் வாழ்ந்தபோது பாண்டி நாட்டில்
இயற்கைவளம் நிறைவாகக் கொழித்ததங்கே!
செழிப்பு மேலும் நிலையாகக் குலுங்குதற்கு ஏற்றவாறு
செயல் முறைகள், திட்டங்கள் இயற்றி ஆண்டான்!
தென்பாண்டிக் கடல்முத்தும் தேனருவி மலையழகும்,
பொன்மாடக் கூடங்களும், பொலிவு தவழ்சோலைகளும்,
வளைந்தோடும் ஆற்றோரம் அமைந்துள்ள கழனிகளில்
விளைந்து சாய்ந்து காற்றில் சதிராடும் கதிர்களுமே
நெடுஞ்செழியன் உளத்துக்கு முழுநிறைவைத் தரவில்லை!
நீள்வையம் பெறுகின்ற வளத்திலெல்லாம் சிறந்த வளம்
நிற்காமல் ஊற்றெடுக்கும்கல்வி வளம் ஒன்றேதான்
எனக்கண்டு,
கற்காதோர் வாழும் நாட்டில் பிற
வளமெல்லாம் பாழே என்றான்!
பாசி படராமல் இதயத்தைப் பளிங்காக்கும் கல்வியினை
ஆசிரியப் பெருமக்கள் ஊட்டுகின்றார் அதனாலே
உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் - அக்
கற்றறிவாளரைக் காத்திடல் வேண்டுமெனத்
தொடங்குகின்ற புறப்பாடல் ஒன்றைத்
தமிழன்னை - கழுத்தில்

தொங்கவிட்டழகு பார்க்க மாலையாகத் தொடுத்திட்டான்!
தோகையாம் கோப்பெருந்தேவியவள் அவன்
தோள் தழுவிக் கொஞ்சி சில கேள்விகளைக் கேட்டறிந்தாள்!
"உற்றுழி உதவுதல் எனில் என்னவாம்
மன்னவா?" இது முதல் கேள்வி!
"ஊறுபாடு ஒன்று ஆசிரியர்க்கு நேருமெனில்
உடன் சென்று துணை நிற்கவேண்டு'
மென்றான் நெடுஞ்செழியன்!
"உறுபொருள் கொடுத்தல் எனில் யாது
பொருளோ?" எனக் கேட்டாள்!
"ஊதியம் ஆசிரியர்க்கு மிகுதியாய் அளித்திட
வேண்டும்" என்றான், அந்த நெடுஞ்செழியன்!
"உற்றுழி உதவி, உறுபொருள் கொடுப்பதுடன்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே! என்றான்.
"அதற்கென்ன பொருள்" என்று அரசியார் பொருள்
அறிந்திருந்தும் அவன் வாயால் கேட்க ஆவலுற்றாள்!
"வண்ணமயிலே! பிற்றை நிலை எனில்
பிற்பட்ட நிலையென்றும்
வழிபாட்டு நிலையென்றும் பொருள்கள்உண்டெனினும்
பெருந்துயரமெனும் பிற்பட்ட நிலையெய்திட்ட போது கூட
திருமுகம் சிறிதும் சுளிக்காமல் கற்றல் நன்றென்பதாலேதான்
இனிதான அறிவுதனைப்பெற விழைவோர்
முனியாது கற்க வேண்டுமென எழுதியுள்ளேன்' என்றான்.
புன்னகையை நெளியவிட்டு அவன் முகத்தில்
முகம் புதைத்து
மின்னொளிக் கன்னமிரண்டும் சிவப்பேறப் பூரித்துப்போய்
"இன்னுமொரு ஐயப்பாடு மன்னவனே
அன்னையொருத்திக்குப் பிறந்த பிள்ளைகளில்,
கல்வி கற்ற பிள்ளை - கல்லாப்பிள்ளை
இவையிரண்டும் அவளுக்கு
கண்கள் இரண்டைடப் போல்தானே? எனக் கேட்டாள்!
"பிறந்தார்கள் இருவர், ஒரு தாய் வயிற்றில் என்றாலும்
சிறந்தோனாய்த் தாய் எண்ணிச் சிந்தை குளிர்வதெல்லாம்
அறம், திறம் உணர்த்துகின்ற கல்வி நீரோடையிலே

அன்றலர்ந்த மலராக இருக்கின்ற
அறிவார்ந்த மகனைத்தான்!"

என்று கூறிக்கொண்டே மன்னன் எழிலரசி மேல் சாய்ந்து எண்ணத்தை ஓடவிட்டு மேலும் எழுதினான் ஓலையிலே!

கற்றலின் பெருமையை விளக்கும் பாடல்!

தொடர்ந்து சொல்கிறான். அண்ணன் தம்பி இரண்டுபேர் இருந்து அண்ணனுக்குத்தான் பட்டம் என்ற உரிமை இருந்தாலும்கூட தம்பிகற்றவனாக இருந்தால் அவனைத்தான் அழைத்து அரசுக் கட்டில் அமர வைக்க வேண்டுமேயல்லாமல் மூத்தவன் என்தற்காக கல்லாதவனை அழைக்கக் கூடாது என்ற கருத்தையும் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழிய பாண்டியன் அன்று எழுதிய புறநானூற்றுச் செய்யுளியிலே மிக அழகாகக் காட்டுகிறான்.

"உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே!
பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்
சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்
ஒரு குடிப் பிறந்த பல்லோருள்ளும்,
'மூத்தோன் வருக' என்னாது, அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன் கண்படுமே!"

வேற்றுமையுள்ள நான்கு பிரிவுகளாக இருந்தாலும்கூட அதில் கீழ் என்று கருதப்படுகின்றவன் கற்றிருந்தானேயானால் அவன் மேலென்று கருதப்படுவனைவிட அறிவாளியாவான், சிறந்தவனாவான், பெருமையுடையவனாவன் என்று அன்றைக்கு ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் விளக்குகிறான்!

உவமைக்கு சிறப்பளித்து பாடப்பட்ட பாடல்கள்

சங்க காலப் புலவர்கள் உவமைக்கு அளித்த தனிச் சிறப்பே சிறுசிறு நிகழ்ச்சிகள் மூலமாக எவ்வளவு அழகாகச் சொல்லியிருக்கிறார் என்பதற்கு ஒன்றிரண்டு எடுத்துக்காட்டுகளை நான் காட்ட ஆசைப்படுகிறேன்.

கடற்கரை ஓரத்தில் ஒரு நாவல்மரம் இருக்கிறது. அந்த நாவல் மரத்திலிருந்து ஒரு பெரிய நாவல்பழம் கிழே விழுகிறது. நாவல் பழம் கிழே விழந்தவுடன் அங்கே பறந்து கொண்டிருந்த வண்டுகளெல்லாம் நமது வண்டுகளில்தான் ஒன்று விழுந்து விட்டது போலும் என்று நினைத்து - வண்டுகளும் நாவல் பழமும் ஒரே நிறமாக இருந்ததினால் அந்த வண்டுகள் நாவல் பழத்தைச் சுற்றி அப்படியே உட்கார்ந்துவிட்டன.

அந்த நேரம் பார்த்து ஒரு நண்டு வளையிலிருந்து வந்தது. அந்த நண்டுக்கு என்னவென்றால் அடடே. இருக்கிற பழத்திலேயே பெரிய பழமாக இருக்கிதே என்று சொல்லி அங்கு கிடந்த வண்டொன்றை நாவல் பழமென எண்ணி பிடித்து கவ்விக் கொண்டு ஓடிவிட்டது. விழுந்தது நாவல் பழம். அதை வண்டு என்று கருதிக் கொண்டு மொய்த்தன வண்டுகள். வண்டுகளுக்கும் நாவல் பழத்திற்கும் வித்தியாசம் தெரியாமல் நண்டு ஓடிவந்து, நாவல்பழம் என்று கருதி வண்டைத் தூக்கிக்கொண்டு ஓடியது. அதை சங்ககாலக் கவிதை வரியில் விளக்கினால் அனைவருக்கும் புரியாது. எனவே எனது எளிய நடையில் விளக்குகிறேன்:

இனியதோர் காதற்கதையினையே கூறவந்த அம்மூவனார்
இனம், இனத்தைச் சரியாகத் தெரிந்து கொள்ளாவிடில்
இன்னல்கள் ஆயிரம் எப்படியெல்லாம் விளையுமென்று
கன்னற் சுவையூறும் நற்றிணையில்
கடற்கரைக் காட்சியொன்றைக் காட்டுகின்றார்
பொங்கியெழுந்து மோதுகின்ற
அலைப்படைகள் பொருதிப்பொருதி
சங்கொதுங்கும்கடற்கரையின் மணற்பரப்பில்
நாவல்மரத்துக் கனியொன்று உதிர்ந்து உருளக் கண்டு
ஆவலுடன் அதுவும் தன்இனந்தான் எனத்
தவறாகக் கருதியதால்
மண்டியதாம்அந்தக் கனியைச் சுற்றிச்சுற்றி
வண்டினங்கள்!என்னே மடமை? அப்போது
நண்டொன்று நல்லபழம் கிடைத்த தென்று விரைந்தோடி
வண்டொன்றைக் காலில்பற்றிக் கொண்டதுவாம்!
இனமறியாக் குற்றத்தால் இடுக் கண்ணில் சிக்கிக்கொண்டு
மனம்பதறி அவ்வண்டு மாண்டு போகும்
நிலையைக் கண்டு

மொய்த்திருந்த வண்டுக்கூட்டம் மேலெழுந்து பறந்தவாறு
முகம்வாடி அகம்நொந்து ஓசையிட்டுப்
பூசல்புரிந்ததுவாம்!
வண்டென்று தெரியாமல், நாவல்
பழமொன்று கிடைத்ததென
நண்டும் மிக மகிழ்ந்து அதனைக் கவ்விக்
கொண்டே விரைந்த நேரம்
இனம் கண்டு கொள்ளாமல் நாவல் கனியை நெருங்கி
இக்கட்டில் மாட்டியதால் இன்னுயிரை
இழக்கின்றேன் - என்றே
பாவம் பளபளக்கும் அந்த வண்டு பதறிற்றாங்கே!
யாரும் துணைக்கில்லா அந்த வேளை மின்னலென
உதவியொன்று நாரை உருவில் வந்ததம்மா - வண்டின்
உயிர்காக்கும் தோழன் போல் வந்த பறவையின் வாய்க்கு
இரையாகித் தொலையவேண்டுமே என்றஞ்சி அந்த நண்டு
விரைவாக ஓடுதற்கு வண்டுதனை விடுத்தெறிந்துவிட்டு,
வளைதேடி ஒரு நொடியில் கண்டுபிடித்துத் துள்ளி
ஒளிந்தேகி மறைந்ததனால் நண்டும் உயிர்
பிழைத்துக் கொண்டதுவாம்!
நல்லவேளை நாரைமட்டும்தக்க சமயத்தில் வராதிருந்தால்
நாவல் பழத்தைத் தன்னினம் எனத்தடுமாறி
ஏமாந்த வண்டின்
நாள் முடிந்துபோயிருக்கும்! "நண்டின்
பிடியினின்று விடுபட்டு
நமது இனத்தோழன் மீண்டான்!" என்று
ஒலிகூட்டி உற்சாகவிழா நடத்தியதாம் வண்டுக்கூட்டம்!
"இனம், இனத்தைத்தான் தெளிந்து
தெரிதல் வேண்டும் அல்லால்,
மனம்நோகும் வகையில் தொல்லை வந்து
துளைத்துவிடும்" என
காதலரின் பிரிவுத்துயர் உருக்கமுடன்
உரைக்கும் போதும்
கவிஞர் பிரான் அம்மூவனார் கவின் மிகு
இயற்கைக் காட்சியுடன்
கலந்தளிக்கும் அறிவுரையை கற்பனையால்

பெருக்கிப் பார்த்து களிப்பொருபுறம்
கொண்டேனாயினும் கண்கள் மட்டும் ஏனோகலங்கினவே!

இனம் தெரியாமல் போய் சிக்கிக் கொள்ளக்கூடாது!

இதைத்தான் அடையாளம் தெரியாமல் போய் மாட்டிக் கொள்ளக் கூடாது. இனம் தெரியாமல் போய் சிக்கிக் கொள்ளக்கூடாது. அதற்குத்தான் இந்த வண்டு, நாவல் பழம், நாரை, நண்டு நிகழ்ச்சியை அம்மூவனார் மிக அழகாகக் குறிப்பிடுகிறார்.

இதே மாதிரி கலித்தொகையில் ஒரு நிகழ்ச்சி வரும். பாலைக்கலி.

பாலைக்கலியில் வெய்யில் கொடுமையினால் பாலை வனத்தில் இரண்டு மான்கள். ஆண்மான் ஒன்று. பெண்மான் ஒன்று. இந்த இரண்டு மான்களும் தண்ணீர் கிடைக்காமல், நிழல் கிடைக்காமல் பாலைவனத்தில் அலைந்தன. அப்படி அலையும் போது புலவர் பாடுகிறார்.

“இன்நிழல் இன்மையான்
வருந்திய மடப்பிணைக்குத்
தன் நிழலைக் கொடுத்தளிக்கும் கலை”

நிழலே இவ்லாமல் அலைகின்றன இரு மான்கள்! அப்போது இந்த ஆண் மானுக்கு வருகிற அக்கறையைப் பாருங்கள். தன்னுடைய இணை மானுக்கு நிழல் கிடைக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் அந்த வெய்யிலில் ஆண் மான் நின்று கொண்டு “என் நிழலில் நீ படுத்துக் கொள்” என்று பெண் மானை படுக்க வைக்கிறது.

அந்தக் காலத்திலேயே பெண்களிடம் ஆண்கள் பரிவாக இருக்க வேண்டும் என்று சங்ககாலப் புலவனே எழுதிக் காட்டியிருக்கிறான்.

“இன் நிழல் இன்மையான்
வருந்திய மடப்பிணைக்குத்
தன் நிழலைக் கொடுத்தளிக்கும் கலை”

இனிய நிழல் இல்லாமல் நின்று கொண்டிருந்த பெண் மானுக்கு தன்னுடைய நிழலைக் கொடுத்து விட்டு நின்று கொண்டிருந்தது ஆண் மான்.

காளிதாசன் வர்ணித்த பொருந்தாக் கூட்டணி!

இதே மாதிரி ஒரு வெய்யில்கொடுமை, காளிதாசனுடைய காவியத்தில் வருகிறது. அந்தக் கொடுமை எப்படியென்றால் ஒரு பாம்பு - அது; நிழல் இல்லாமல் வெய்யில் கொடுமையில் அலைகிறது. அப்போது ஒரு தவளையும் நிழலின்றி அலைகிறது. தவளையும் நிழல் தேடுகிறது. பாம்போ அந்த வெய்யிலில் முழு உடலையும் போட்டு புரட்ட முடியாமல் கஷ்டப்படுகிறது. வேறு வழியில்லாமல் தன்னுடைய வாலை மாத்திரம் ஊன்றிக் கொண்டு முழு உடம்பையும் மேலே தூக்கிக் கொண்டு நிற்கிறது. அப்படி நிற்கிறது பாம்புதான் என்று தெரியாமல் அந்த தவளை போய் அதன் நிழலில் நிற்கிறது. அது பொருந்தாத கூட்டணி. (பலத்த கைத்தட்டல்) ஒருத்தரை ஒருத்தர் புரிந்து கொள்ளாத கூட்டணி. வெய்யில் தணிந்தால் பாம்பு என்ன செய்யும்? தவளை என்ன ஆகும்? அது தான் பார்க்கிறோமே அரசியலில்! அப்படிப்பட்ட ஒரு கூட்டணியை காளிதாசன் காட்டுகிறான்.

ஆனால் ஒரு இயற்கையான கூட்டணியை ஒரு ஆண் மானும், பெண் மானும், ஆண் மான் இரக்க சிந்தையோடு மாத்திரம் அல்ல, அன்பின் உச்சத்தில் சென்று தன்னுடைய காதலியான பெண் மானுக்கு தன்னுடைய நிழலையே கொடுத்து அதன் களைப்பை ஆற்றுகின்ற அந்தக் காட்சியையும் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற இரண்டு நிகழ்ச்சிகளாகும்

உவமை நயத்திலேயே ஒரு வேடிக்கையான, நகைச்சுவையான நிகழ்ச்சியை ஊன்பொதிப் பசுங்குடையார் என்ற புலவர் எழுதிக் காட்டுகிறார். எப்போதும் புலவர்களுக்கு நான் முதலில் சொன்னது போல் பெரும்பாலான புலவர்களின் வேலையே என்னவென்றால் அரசனைப் பார்க்க வேண்டியது; பரிசு வாங்க வேண்டியது; அதையெல்லாம் ஏற்றிக் கொண்டு செல்ல ஒரு யானை வேண்டும் என்று கேட்க வேண்டியது; அரசனும் ஒரு யானையைக் கொடுக்க வேண்டியது; யானைக்கு யார் தீனி போடுவது என்று கேட்க வேண்டியது. இதுதான் அந்தக்காலத்து புலவர்களில் பல பேர் வேலையாக இருந்தது. நான் புலவர்களை இழித்துக் கூறவில்லை.

அதிலும் நான் முதலில் குறிப்பிட்டேனே! பொதுவுடைமைக் கருத்துக்கள், சம தர்மக்கருத்துக்கள், நல்ல ஆட்சி, நல்ல உலகம் இவைகளைப் பற்றி பாடிய புலவர்களும் உண்டு.

புராணத்தை உவமையாக்கிய ஊன்பொதிப் பசுங்குடையார் பாடல்.

அந்தப் புலவர்களில் ஒருவர் ஊன்பொதிப் பசுங்குடையார். அவர்சோழன் இளஞ்சேட்சென்னி என்ற ஒரு மன்னனைப் பார்க்கப் போகிறார் பரிசு வாங்க! அதைப் பற்றி நான் எழுதிய எளிய நடையிலேயே கூறுகிறேன்.

புறப்பாடல் தமிழ்ப்புலவர் இயற்றும்போதே
புராணக் காதைகளும் புழக்கத்தில் உண்டு போலும்!
அதனாலே அற்புதமாய் உவமையொன்றை
அரும்புலவர் பசுங்குடையார் அன்றைக்கே எழுதியுள்ளார்
அரசிருக்கை கொண்டிருந்தபோது சோழனிடம்
பரிசில் வேண்டிப் பாவலர் “பாட்டாடை” போர்த்த;
“பாட்டாடைக்கு” க்கு பதிலாக “பட்டாடை” போர்த்திப்
பார்வேந்தன் பல்வகை அணிமணி பரிசாய்த் தந்தான்!
மன்னர் குலத்தோர் மட்டுமே அணிகின்ற முத்துவடம்
மரகத மணிமாலை மாணிக்க வளையற் குவியல்,
இன்னபிற நகைகளையும் இளஞ்சேட் சென்னி
புன்னகை மிளிரப் பொழிந்தான் புலவரிடம்!
உள்ளமெல்லாம் உவகையால் நிறைந்துபொங்க
கள்ளமில்லாத் தன்சுற்றத்தார்க்கு வாரிவழங்க
கடுவேகப் பயணம் செய்து உற்றார் கைவழியக்
களிப்புடனே அளித்திட்டார் கவிஞர்பிரான்!
காணாத அணிமணிகள் கண்டதாலே; சுற்றத்தார்
கண்டபடி அவற்றை எடுத்துக் கழுத்துக்குரியவற்றைக்
கைகளிலும் கைகளுக்குரியவற்றை அவசரமாய்க்
கழுத்தினிலும் மாற்றிமாற்றி மாட்டிக்கொண்டு;
கணையாழி விரலுக்குரியதெனப் புரியாமல்
காதணியிதுவென்று பூட்டிக்கொண்டார்!
ஊன்பொதிப் பசுங்குடையார் உரக்கச் சிரித்தார் - அந்த
உறவினரின் செயலுக்கு உவமை
யொன்றும் கண்டார் அங்கே!

இராமனது மனைவியாம் சீதைதனை இராவணனாம்
இலங்கை வேந்தன் சிறையெடுத்துச் சென்றபோது,
வழியெல்லாம் அவள் கழற்றி எறிந்திட்ட அணிமணியை
வானரங்கள் எடுத்து வந்து அணியும் வகை அறியாமல்
இடைக்கென உரியதை மந்திகள் தம் கழுத்துக்கும்
எழில் கழுத்துக்குரியதைக் காலுக்கும் தொடைக்குமாக
அணிந்தலைந்து திரிந்ததாகக் கற்பனை உண்டன்றோ?
அக்காட்சியினை உவமையாக்கிப் புலவர் ஏறு; அவர்தம்
உற்றார் உறவினரின் செயல்பாட்டைத் தமிழ்
கற்றார் களிக்கும் வண்ணம் தீட்டியுள்ளார்.

அதைத்தான் எளிமைப்படுதிச் சொன்னேன்.

சிந்தனையைத் தூண்டும் அற்புதமான உவமை!

சீதை எறிந்த நகைகளையெல்லாம் எடுத்து, குரங்கு காலில் போட வேண்டியதை, கையிலே போட்டுக் கொண்டது விரலில்போட வேண்டியதை காதில் போட்டுக் கொண்டது. அது மாதிரி இந்த உறவினர்களும் அரசன் கொடுத்த அணிமணிகளையெல்லாம் கொண்டுவந்து கொடுக்கும்போது அவர்களும் அந்த குரங்குப் புத்தியோடு எடுத்து மாட்டிக் கொண்டதை புலவர்பார்த்து சிரித்து, அந்த சிரிப்பிலேயும் ஒரு சிந்தனையே தூண்டக்கூடிய உவமையைத் தருகின்றார்.

மற்றொரு அற்புதமான உவமை. அய்யூர் மூலங்கிழார் கையாண்டுள்ள உவமை. கானப்பேர் எயில் கடந்த உக்கிரப்பெருவழுதி - கானப்பேர் என்றால் இன்றைக்கு இருக்கிற காளையார் கோயில் அதற்குப் பெயர்தான் சங்க காலத்தில் கானப்பேர்! 'எயில்' என்றால் கோட்டை! அந்த கோட்டையை ஆண்டு கொண்டிருந்தவன் வேங்கை மார்பன். அந்த வேங்கை மார்பனை வெற்றி கண்டு, அந்த காளையார் கோட்டையை கைப்பற்ற வேண்டும் என்று உக்கிரப்பெருவழுதியின் துணைவி அரசி வலியுறுத்துகிறாள்.

சின்ன மருது, பெரிய மருது என சிவ கெங்கைச்
சீமை ஆண்டு;
சிவந்தமண்ணின் வரலாற்றில் செங்குருதி மலராய்ப் பூத்த
சிங்கநெஞ்ச மாவீரர் இருவருக்கும் சிலைகள் இருக்கின்ற,

காளையார்கோயிலுக்குப் பழங்காலத் தமிழகத்தில்;
'கானப்பேர்' என்று பெயர் உண்டு; இன்றும் அது,
மானப்போர் தொடுக்கின்ற மறவர்பூமி அங்கு;
வேங்கை மார்பன் எனும் குறுநில வேல்வேந்தன்
ஓங்குபுகழ் கொண்ட அரண் ஒன்று அமைத்து - அதனை
வெற்றி கொள்ள யாரால் முடியுமென அறைகூவல்
விடுத்திருந்தான்.

அணுவைத் துளைத்து அதற்குள் நுழையவும் கூடும் -
ஆனால் அந்த
அரணுக்குள் நுழைதல் இயலாதென்று
அடலேறு வீரரெல்லாம் திகைத்து நின்றார்!
கயற்கொடி கொண்ட மன்னன் உக்கிரப்பெருவழுதி
கயல்விழி மங்கையொருத்திக்கும் காதலனாம் - அந்தக்
காதற்கிழத்தியுடன் ஒருநாள் கட்டிலறைக் காவியம்
படித்தபோது;

அவள்
கடைவிழியோரம் வினாக்குறியைத் தொங்கவிட்டு,
"கண்ணாளா! எனக்கோர் ஐயம் போக்கிடுக" என்றாள்.
"என்ன கண்ணே; உனக்கு ஐயம்? அதோ நீந்துகின்ற
அன்னத்தின் தூவிபோல் மென்மை உனக்கு
எப்படி வந்ததென்று என்னைக் கேட்கின்றாயா? அல்லது
வண்டுகள் கொண்டு வந்து கொட்டாமலே உன் வாயிதழில்
மொண்டு குடிக்கின்றேனே தேன்; அது
வந்தவிதம் தெரிந்துகொள்ள விரும்புகின்றாயா?
செந்தாமரையைப் பார்த்துச் செய்யப்பட்டது உன் முகமா?
அல்லது
செல்வமே! உன் முகம் பார்த்துத்தான் செந்தாமரை
உருவானதோ என்ற ஐயமா?
சென்டு இரண்டும் தாங்காமல் - குளத்தில்
கெண்டைக்குப் போட்ட தூண்டிலில் நெளிகின்ற புழுப்போல
நெளியும் இடை நிலைக்குமா? அல்லது
ஒளியுமிழும் உன் தந்தத் தொடைகள் அதனைத் தூக்கி
நிறுத்துமா

உன் மனத்தில்
விளைந்த ஐயமெல்லாம் இதுதானே?" எனக்கேட்ட
வழுதியின்முன்;

வளைந்த கதிர்போல தலை நாணிக்கொண்டு அவள்;
"என்மீது கவிதையெழுதிப் பரிசுபெறக் கேள்வி
எழுப்பவில்லை நான்!
"எயில்" என்றால் இன்பத்தமிழில் பொருள் என்ன?
சொல்லுங்கள்" என்றாள்!
"அட, மடமயிலே! இது தெரியாதா?
அயலார் படை தடுக்க;
அரண்கட்டுகின்றோமே தலைநகரைச் சுற்றி
அதற்குப் பெயர் தான் "எயில்" என்றான் மன்னன்!

அந்தக் கோட்டையைப் பிடிக்க வேண்டும் என்றாள். மன்னன் படையெடுத்தான் அந்தக் கோட்டையை பிடித்தான். வெற்றி கண்டபிறகு, அய்யூர் மூலங்கிழார் மன்னனைச் சந்திக்கவருகின்றார். அங்கு வெற்றிக் களிப்பிலே இருக்கின்ற மன்னனைப் பார்க்கின்றாள்.

ஐயூர் மூலங்கிழார் பாண்டியன் அவைக்கு வந்தார்.
அரசே! மதியாத பகைவரெல்லாம் உமை
மதித்துப் புகழ்கின்ற பெருமை என்னே!
களம் சென்றால் வெற்றியன் றிவேறொன்று
அறியாத வேந்தே! இன்று முதல் உம்மை;
"கானப்பேர்எயில் கடந்த உக்கிரப் பெருவழுதி" என
காவியங்கள் பாடட்டும்! கவியரங்கம் புகழட்டும்!
கதிர் உள்ளளவும் அப்பெயரே
நிலைக்கட்டும்" எனப்புகன்றார்
"நன்றி புலவரே!" எனப் பணிந்தவேந்தன் அவரைப்பார்த்து
- இப்போரில்
குன்றிவிட்ட வேங்கைமார்பன், கோபக்கனல் உமிழ
கானப்பேர் எயிலை மீட்பதற்கு மீண்டும்
களம் அமைக்கப்போகின்றானா? எனக் கேட்டான்
அதற்கு ஐயூர் மூலங்கிழார் சொன்ன பதில்
அரியதோர் உவமையினை
அன்னைத் தமிழுக்கு வழங்கியது!

அஃதென்ன?
உலைத்தீயில் கொல்லன் காய்ச்சிடும் இரும்பில்
ஒரு துளி நீர் பட்டால் அந்நீரை மீட்டிடல் முடியுமா?
(அவ்வாறே)

உக்கிரப் பெருவழுதி வென்றுவிட்ட கானப்பேர்எயிலும்;
உலைக்களத்து இரும்பு உறிஞ்சிய நீர்த்துளியாய் ஆனது
என்று

உமது பெருமையைப் பேசி - வேங்கைமார்பன்
உளம் நொந்து நிற்கின்றான்" என்றார் - அந்தத்

தங்கப் புலவர் தந்த உவமை அழகுக்குத்
தக்க பரிசு என்ன தருவதென்று புரியாமல்
தவித்திருப்பான் பாண்டியன் என்கின்றேன் நான்;
தவறுண்டா என் கருத்தில்?
தமிழின் சுரை அறிந்தோரே? கூறிடுவீர்!

*

* "புலவரை இறந்த புகழ்சால் தோன்றல்
நிலவரை இறந்த குண்டுகண் அகழி,
வான்தோய் வன்ன புரிசை, விசும்பின்
மீன்பூத் தன்ன உருவ ஞாயில்,
கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை,
அருங் குறும்பு உடுத்த கானப்பேர் எயில்,
கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய
இரும்புஉண் நீரினும், மீட்டற்கு அரிதுஎன,
வேங்கை மார்பன் இரங்க, வைகலும்
ஆடுவொளக் குழைந்த தும்பைப் புலவர்
பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே!
இகழுநர் இசையொடு மாயப்
புகழொடு விளங்கிப் பூக்க நின்வேலே!"

*

(புறநானூறு : பாடல் : 21
பாடியவர் : ஐயூர் மூலங்கீழார்)

"உலைத்தீயில் கொல்லன் காய்ச்சிடும் இரும்பில்
ஒருதுளி நீர் பட்டால் அந்நீரை மீட்டிடல் முடியுமா?
உலைக்களத்தில் கொல்லன் காய்ச்சுகின்ற இரும்பு இருக்கிறதே அதில் ஒரு துளிநீர் பட்டு விட்டால் அந்த நீரை மறுபடியும் திரும்பப் பெற முடியுமா? அது மாதிரி நீ பிடித்த கோட்டையை மறுபடியும் வேங்கை மார்பனால் பிடிக்க முடியாது என்பதை அவன் உணர்ந்திருக்கிறான் என்ற ஒரு

அருமையான உவமையை அய்யூர் மூலங்கிழார் இந்தப் பாடல் மூலமாகத் தருகின்றார்.

பல்லியை வைத்து தீட்டப்பட்ட பாடல்!

இன்னொன்று பல்லி சொல்வதைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். பல்லி சொன்னால் நல்லது என்று அந்தப் பல்லியை வைத்து பாலையிலிருந்து பிரிந்து சென்ற தன்னுடைய காதலன் திரும்பி வருவான் என்பதை காதலி ஆவலோடு எதிர்ப்பார்ப்பதை ஒரு புலவர் பாடுகிறார் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்பது அவருடைய பெயர்.

அந்தக் காலத்தில் இப்படி பொருள்தேடி யாராவது கணவனோ காதலனோ சென்றுவிட்டால் மிகவும் வருத்தப்படுவார்கள். செல்லமாகக் கோபித்துக் கொள்வார்கள். கோப்பெருஞ் சோழன் அதைப்பற்றி ஒரு பாட்டே பாடியிருக் கிறான்.

“அருளும் அன்பும் நீங்கித் துணை துறந்து
பொருள் வயிர்பிரிவோர் உரவோர் ஆயின்
உரவோர் உரவோர்ஆக, மடவம் ஆக நாமே”

அன்பும் அருளும் நீங்கி - வெறும் பொருளுக்காக நம்மைவிட்டுப் பிரிந்து போனவர்கள் அறிவுடையவர்கள் எனத் தம்மைக் கூறிக் கொண்டால் அவர்கள் அறிவுடையவர்களாகவே இருக்கட்டும். அவர்களை பிரிந்த காரணத்திற்காக நாம் அறிவற்றவர்களாகவே இருப்போம் பொருளுக்காக யார் போனாலும் அவன் தன்னை அறிவுடையோன் என்று சொல்லிக் கொண்டால் அவன் அறிவாளியாகவே இருக்கட்டும் என்றும் சொன்னார். அது பெண்ணுக்காக பாடப்பட்ட பாடல் இந்த மண்ணுக்கும் பொருந்துகிறது. (பலத்த கைதட்டல்) பொருள் தேடுவதற்காக காதலன் பிரிந்து செல்கின்றான். அவன் வருவானா! வருவானா! என காதலி தவித்துக் கொண்டிருக்கிறாள். அப்போது தோழி சொல்கிறாள்.

“உள்ளார் கொல்லோ தோழி கள்வர்தம்
பொன்புனை பகழிசெப்பம் கொண்மார்
உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்

செங்காற் பல்லிதன் துணை பயிரும்
அங்காற் கள்ளியம் காடு இறந்தோரே”

இது எல்லோருக்கும் புரியாது. புரிய நியாயமில்லை. அவ்வளவு கடினமான சொற்கள். ஆனால் அதற்கு என்ன பொருள் என்றாள், “தோழி கவலைப் படாதே! உன்னுடைய காதலன் பாலைவனத்தில் கள்ளிக் காட்டுக்குள் போய்க் கொண்டிருப்பான். அப்போது பல்லியின் சத்தம் கேட்டு திரும்பி வந்து விடுவான்” என்கிறாள். “எப்படி?” என்கிறாள் காதலி! அந்த கள்ளிக்காட்டில் இருக்கிற ஆண் பல்லி, பெண் பல்லியின் துணையை நாடி அது துரத்திக் கொண்டு போகும். அப்படித் துரத்திக் கொண்டு போகும்போது ஒரு ஓசை எழுப்பும். அந்த ஓசை எப்படி இருக்கும். ஒரு வேடன் தன்னுடைய அம்பின் நுனியை தட்டிப் பார்க்கும்போது டிக் டிக் என்று ஓசை கேட்குமே. அது மாதிரி ஓசை.

(அப்போது ஒலிபெருக்கி அருகே நகங்களால் நெருடி பல்லி சப்தத்தைப்போல ஓசை எழுப்பிக் காட்டினார் கலைஞர்).

அதுபோன்ற ஓசையை பல்லி எழுப்பும், என் அப்படி எழுப்பும் என்றால் பெண் பல்லியை தேடிக் கொண்டு ஆண் பல்லி அவசரமாக ஓடும்போது ஆசையில் அந்த ஓசையை எழுப்பும். அதைப் பார்த்து அடடே! பல்லிக்கு இருக்கிற அன்பு நமக்கு இல்லையே என்று காதலன் ஓடிவருவான் என்று கூறுகிறார்.

கணவன் நடுங்கிய காரணம் என்ன ?

ஒரு கணவன் நடுங்குகிறான். அதற்கும் ஒரு உவமை சொல்கிறார். அந்தக் கணவன் ஏன் நடுங்குகிறான் என்றால், அவன் மனைவியை விட்டுவிட்டு பரத்தை வீட்டிற்குப் போயிருக்கிறான். போனவன் சிலநாள் கழித்து திரும்ப வருகிறான். திரும்பி வந்தபிறகு பரத்தை ஒரு செய்தி சொல்லி அனுப்புகிறாள்.

“தோழி நீ ஒன்று அறிவாயா? தோகையெனது
தோள் தொத்திக் காளையவன் சுகித்திருந்தபோது
கொக்கின் மூக்கைப்போல் நீண்டிருக்கும்
குளத்து ஆம்பல் மலர் குலுங்கும் ஊரான்;

கோபத்தில் ஒருநாள் கோதையென்மீது பாய்ந்து
கூந்தல்தனைப் பற்றியிழுத்த தோடமையாமல்
கைவளையளையும் கழற்றுதற்கு முனைந்து
கடுகடுத்த முகத்துடனே குதித்தோடி வந்தான்
ஆத்திரம் கொள்ளாதே தலைவா! பொறுத்திடுக!
அமைதி நீ கொள்ளாவிடில்; இக்கணமே இச்செய்தியினை
உன் அருமைமிகு மனைவிக்கு அறிவிப்பேன் என நான்
உரைத்ததுதான் தாமதம்; உடன் என்ன
ஆனான தலைவன் - என்று,
உன்னிடம் சொல்வதற்கே இயலாமல் நான்
ஒருத்தி மட்டும் தனியாகச் சிரிக்கின்றேன்
ஓயாமல்! என்றாள்!
"அப்படி என்னதான் நடந்தது? அதை நானறியச்
செப்புக பெண்ணே" யென்றாள் செந்தாழம்பூத் தோழி!
"ஆநிரை கவர்வதற்கு வில்லேந்திப் போர்புரிந்து
ஆர்த்தெழுந்த பகைவர்களை வென்று காட்டி,
மானமுரசு கொட்டி வாழுகின்ற நமது மன்னன்
மலையமானின் அத்தாணி மண்டபத்தில்;
வேற்று நாட்டினின்றும் பரிசில் பெறவந்துள்ள - இசைக்
கூத்தர்கள் கொட்டுகின்ற மத்தளத்தில்
அவர்தம் விரல்கள் பட்டு 'மார்ச்சனை' வைத்த பக்கம்
அதிர்வதுபோல் அவன் உடல் முழுதும்
நடுங்கியது கண்டேன் என்றாள்'

உன் மனைவியிடம் சொல்வேன் என்றாளாம். அவன் அதற்கு நடுங்கினானாம். நடுங்கினான் என்று சொன்னால் போதாதா? அதுவும் எப்படி நடுங்கினானாம். சங்ககாலப் புலவர் சொல்கிறார்-

மலையமானின் அத்தாணி மண்டபத்தில் பக்கத்து நாட்டுக்காரர்களெல்லாம் வந்து மேளாதாளம் கொட்டி ஆடிப்பாடுகிறார்களாம். இப்படி ஆடும் போது, மத்தளத்தை அடிக்கிறானே, அந்த மத்தளத்தில் இருக்கின்ற 'மார்ச்சனை' கருப்பாக வைக்கப்பட்ட ஒரு பதம். அதை வேகமாகத்தட்டும் போது எப்படி அதிருமோ, அது மாதிரி கணவன் உடல் நடுங்கியது. எவ்வளவு அருமையான உவமையை ஒரு ஆண்மகன் நடுங்கியதற்கு பொருத்திக்காட்டுகிறான் என்பதற்காக இதை நான் சொன்னேன்.

தாயின் நிலையை உணர்த்தி தோழி கூறிய ஆறுதல்!

நான் முதலில் குறிப்பிட்ட நற்கண்ணை, பெருநற்கிள்ளியை காதலித்தவள். அந்தக் காதலுக்கு குறுக்கே தாய் நிற்கிறாள். அதற்காக மிகவும் வேதனைப்படுகிறாள், வருந்துகிறாள். அதைத் தான் அவள் தோழி சொல்கிறாள், ஏன் உன் தாயார் தடுக்கிறாள் என்று தப்பாகக் கருதுகிறாய்? கொஞ்சம் ஆராய்ந்து பார் கண்ணே என்கிறாள்.

"ஆய்ந்து பார் ஆரணங்கே!
காய்ந்து சினந்துகடிந்து கொண்டாலும் அன்னை,
தேய்ந்திடு நிலவாய் நின்காதல்
ஆகாதிருக்கவே எச்சரிக்கின்றாள் உன்னை!
வளர் பிறையாய் உம் காதல் வளர்ந்து
குளிர் நிலவாய் அமுதமழை பொழிந்தால்
குலமகளே! உமை வாழ்த்தாமல்
உன் தாயின் மனமென்ன;
நிலமகழ்ந்து எடுத்திட்ட
இரும்பாகப் போமோ?
கருவுற்ற காலத்தில் அவள் நாவினைக்
கசப்பாக்கித் தொல்லை தந்தபோது
திருவுற்ற அந்தத் தாய்
புளிப்பாலே கசப்பு போக்கி - உன்
புன்னகை காணத் தவமிருந்தாள்!
ஆலின் இலை போன்ற அவள் அழகு வயிற்றை - ஒரு
சாலின் வடிவாக்கி நீ அலங்கோலம் தந்தபோதும்,
உன் கோலம் காண்பதற்கே - அவள்
உயிர் வாழ்ந்து கொண்டிருந்தாள்!
மணி வயிற்றுக்குள்ளிருந்து நீ
மாறி மாறி உதைத்த போதும்,
வலி பொறுத்துக் கொண்டபடி
அணியென்ன பூட்டலாம்அந்தக் காலுக்கென்று
ஆயிரம் சிந்தனை செய்திருந்தாள்!
ஊதையில் துரும்பெனத் தாயுடல் அலைக்கழித்து
உலகில் நீ பிறந்துருண்டு அழுதபோது - இன்ப
போதையில் துன்பமெலாம் மறந்திருந்தாள்!
இன்றவள், உன்

பாதையில் பாடம் சொல்லல் ஒரு பாபமா?
பூவைத்துப் பொட்டிட்டு முத்தமாரி பெய்தபோது - நீ
பூவையாய் ஆவது எப்போதென்று
ஆண்டெண்ணிக் கிடந்த அன்னை;
கோவையாய்ச் சிவந்த உன் இதழைக் கிளியொன்று
கொத்துமென்று தெரியாததேதையா என்ன?
ஆற்றில் இறங்கிக் குளிக்கத் தடைகூற வில்லை அன்னை!
ஆழம் தெரிந்து இறங்கென்று கூறுகின்றாள் அவ்வளவே!

இப்படிச் சொல்லி தோழி, வருந்திக் கொண்டிருக்கிற காதலிக்கு ஆறுதல் கூறுகின்றாள்.

சங்ககாலத் தமிழில் எப்படி இரங்கல் தெரிவிக்கப்பட்டது. எவ்வளவு உணர்ச்சி மயமாக அந்த இரங்கல் தெரிவிக்கப்பட்டது என்பதற்கான ஒன்றிரண்டு சான்றுகளை உங்கள் முன்னால் நான் எடுத்து வைக்க விரும்புகின்றேன்.

குளமுற்றத்துஞ்சிய கிள்ளி வளவன் என்ற ஒரு மன்னன் அவன் பெரும் போர்களில் எல்லாம் வென்றவன். அவன் திடீரென்று மறைந்து விடுகிறான்.

கருவூரைக் கிள்ளி மன்னன் முற்றுகையிட்டபோது,

"காவல் மரங்கள் சாய்கின்ற ஒலி கேட்டு;
அரண்மனைக்குள் ஒளிந்துகொண்டு அஞ்சி நடுங்கும்
ஆண்மையற்ற கோழையினை வெற்றி
கொளல் பெருமையாமோ?" என

கிள்ளிவளவன் முன் சென்று அந்த ஆலத்தூர் கிழார் அள்ளிப் பொழிந்த அறிவுரைப் பாடல் கேட்டு துள்ளி வந்த படையுடனே அவன் திரும்பிச் சென்றான்-

கொள்ளி மீது வீழ்ந்த புழு மீண்டதுபோல் மீண்டான் கருவூர் மன்னன்! ஆலத்தூர் கிழாரையடுத்து அரிய பாடலொன்று ஆவூர் மூலங்கிழார் அவன் மீது பாடியுள்ளார்.

"ஆற்றல்மிகு அடலேறே! அரசர்க்கரசே!
அனல் பறக்கும்; நீ சினங்கொண்டால்!
அருள்கொண்டு நீ பார்த்தாலோ!

அவ்விடத்தே,

சுடர்ப் பொன்மணிகள் ஒளி உமிழும்!

கோடைக் கதிரவனைக் குளிராக்கிக் காட்டிடவும்,
குளிர்நிலைவை தணலைப்போல சூடாக்கித் தந்திடவும்
கொற்றவனே உன்னால்தான் முடியும்”

என்று நற்றமிழால் போற்றியுள்ளார் அப்புலவர்! இவ்வளவு பெரிய போற்றுதல்களையெல்லாம் புலவர்களிடம் கேட்ட அந்த மாவீரன் இறந்து விட்டான் அவன் இறந்தவுடன்,

மாற்றார் எப்படை கொண்டுவரினும்; இவனிடம்
தோற்றார் என்றே வீரவரலாற்றைத் தீட்டிய வளவன்;
ஆவின் பாலொத்த அருள்வடியும் முகத்தழகன்,
சாவின் பிடிதனிலே ஒருநாள் சாய்ந்து விட்டான்...
செய்தி கேட்டு செவிப்பறைகிழிந்தது போல்
செந்தமிழ்ப் புலவர் கூட்டம் சிந்தியது கண்ணீர்அருவி!
“இறந்தோரைப் புதைப்பதற்குத் தாழிதனைச் செய்வதிலே
சிறந்தோரைக் கேட்கின்றேன்; எம்மன்னன்
கிள்ளியினை வைத்துப் புதைக்கின்ற தாழி யெனில்
கீழ்த்திசை மேற்றிசை வானத்தை வளைத்து வைத்து
நிலவுலக முழுவதையும் குயவர் ஆழியாக அமைத்து
நிமிர்ந்து நிற்கும் மேருமலையை
மண்திரளாய்க் கொண்டன்றோ தாழி செய்தல் வேண்டும்!
பூத ஊடல் புதைப்பதெனில்
பொருந்தும் உம் தாழி - கிள்ளியின்
புகழ் உடலை வைப்பதற்கு இந்தப் பூதலமே ஏற்ற தாழி”

புகழ் உடலை வைக்க பூவுலகே போதாதாம்

இந்த பூமிதான் நீ செய்கிற தாழி எனில் அந்த பூத உடலை வைக்க போதுமானதாக இருக்கும். அவருடைய புகழுடலை வைப்பதற்கு போதுமானதாக இருக்காது என்று சொன்னான்.

இப்படி ஒவ்வொரு புலவரும் இரங்கற்பா பாடும் போது ஒரு கவியரசி நப்பசலை அவள் என்ன பாடுகிறாள் என்றால். “யாரும் சாகடிக்கவே முடியாதே; எப்படி இந்த மன்னன் இறந்தான்?” என்று கேட்டுவிட்டு அவளே பதில் சொல்கிறாள்.

“செற்றன்று ஆயினும், செயிர்த்தன்று ஆயினும்
“உற்றன்று ஆயினும், உய்வின்று மாதோ
பாடுநர் போலக் கைதொழுது ஏத்தி

இரந்தன்று ஆகல் வேண்டும் - பொலந்தார்
மண்டமர் கடக்கும்தானைத்
திண்தேர் வளவர் கொண்ட கூற்றே”

இதற்கு எளிய தமிழில் பொருள் என்ன வென்றால்:

“பொன் ஒளி சேர்மாலை அணிந்து
மின்னொளியாய் வாள் வீசி
மண்மீது மாற்றார் படை அழிக்கும்
திண் தேர் வளவனை யாரும் வெல்லுதல் அரிதே!
வளவன் உயிர் கொண்டசாவு; நெஞ்சில்
வஞ்சப்பகை கொண்டோ; அன்றி நேர் நின்று தன்
வலிமை காட்டிப் போர்புரிந்தோ அன்றி
வரிந்து கட்டி அவன் உடல் தீண்டி வளைத்துப்போட்டோ
வென்றுவிட்டதாய் நான் எண்ணவில்லை; அவனைக்
கொன்று செல்ல வந்தசாவு; ஓலைச் சுவடியுடன் ஒரு
புலவரைப்போல் வேடமிட்டு கைதொழுது அவன் உயிரைப்
புதிய பரிசாகக்கேட்டுப் பெற்றிருக்கும் அல்லால்
அவன் உயிரை எடுப்பதற்கு
எவனுக்கும் உடலில் உரமே இல்லை”.

அந்த மன்னனை வேறுவழியில் கொல்ல முடியாது என்ற காரணத்தால் புலவன் மாதிரி ஓலைச் சுவடி எடுத்துக்கொண்டு சென்று “உங்கள் உயிரைப் பரிசாகப் கொடுங்கள்” என்று அப்படித்தான் அந்த மன்னன் உயிரைக் கேட்டுப் பெற்றிருக்க முடியுமே தவிர வேறு யாரும் கொன்றிருக்க முடியாது என்று ஒரு பெண்பாற் புலவர் அன்றைக்கு பாடியிருக்கின்றார்.

தன்மான உணர்வைப் பறைசாற்றும் பாடல் இது!

தன்மான உணர்வுக்கு சங்க இலக்கியத்தில் ஒரு பாடல் சேரமான் கணைக்கால் இரும்பொறை, அவன் போரிட்டு தோற்றுப்போய் சிறையில் அடைக்கப்படுகிறான். சிறையில் அடைக்கப்பட்ட போது

தாகம் ஒரு நாள் அவன் நாவை உலர்த்த சிறைக்
காவல் வீரனை அருகே அழைத்து-
தண்ணிர் விரைவில் கொணர்க என்றான் சற்றுத்
தமாதமாகக் குவளையில் தண்ணீர்
கொண்டுவந்து கொடுத்ததினாலே நெருப்பை

மொண்டு தகித்தது சேரனின் நெஞ்சம்!
பண்டு வாழ்ந்த குலப் பெருமையெலாம்
துண்டுபட்டுப் போனதெனத் துவண்டுவிட்டான்!
ஏடொன்று எழுதிவைத்து
எதிர்காலத் தமிழகமே - அதனைப்
பாடென்று விட்டுச் சென்றான்!
"பிள்ளையொன்று இறந்து பிறப்பினும் சதைப்
பிண்டமொன்று பிறந்து தொலைக்கினும்
மூப்பு கொண்டு மடிந்திடினும்
முடிவிலொரு நோய்கண்டு முடிந்திடினும்
போரில் கலந்து விழுப்புண்பெற்று - மானமிகு
வீரர் என மாண்டிடாத பழி துடைப்பதற்காக
வாள் கொண்டு உடலில் கீறி-
வான்புகழ்; வாழ்வில் சேர்த்தபின்பே
உடலடக்கம் செய்திடும் மானமரபே
அடலேறுகள் மலிந்திடும் தமிழர் மரபு!

அப்படிப்பட்ட மரபில் வந்தவன் தாகத்திற்கு தண்ணீர் தாமதமாகக்கொண்டுவந்ததால் மானமற்று இனிவாழ விரும்பவில்லை என்று சிறைச் சாலையிலேயே உயிரிழந்தான். இந்த புறநானூற்றுப் பாடலையும் எழுதி வைத்துவிட்டு மாண்டு போனான் சிறைச்சாலையில். இது தன்மான உணர்வுக்கு அருமையான எடுத்துக்காட்டு.

அதைப்போல போருக்குச் சென்ற மகன் எப்படி சாகாமல் இருக்கிறான் என்று புறநானூற்றுத் தாய் நினைக்கிறாள். இன்றைக்கு யாராவது அப்படி நினைக்க முடியுமா? அன்று புறநானூற்றுத்தாய் அப்படி நினைக்கிறாள். இதைப்பற்றி நான் எழுதிய பாடல் முழுதும் நான் சொல்கிறேன்; சுவையான பாடல்

பனிமுட்டை அடை காக்கும்
பசும்புல்லின் தரைமீது
மணித் தேர் அசைவது போல்
மாதொருத்தி நடந்து வந்தாள்
கனித்தமிழ்ச் சொல் உதிர்க்கும் புலமை மிக்காள்
காக்கைப்பாடினி பொன்முடியார்க்குத்
தமிழில் அவள் அக்காள்

அதியமான் நெடுமானஞ்சி - வேள்பாரி வள்ளல் நாடன்
சேரமான் மாவெண்கோவன்,
கானப்பேர்தந்த வழுதி - மற்றும்
சோழனாம் பெருநற்கிள்ளி
ஆகியோர் புகழைப்பாடித் தமிழுக்கு
அணி பல பூட்டி நின்ற
அறிவொளி ஔவை நல்லாள்!
காலைக்கதிரவன் போல் கை சிவக்கக் கொடை வழங்கும்
காவலர்கள் வாழ்ந்திருந்த தமிழ்நாடு!
ஓலை கொண்டொருவன் போர் என்று
வந்துவிட்டால்
மாலை சூடுகின்ற வேளையென்றும் பாராமல்
தோளைத் தொத்துகின்ற பெண்கிளியைப் புறம் விடுத்து,
வாளைக் கூரேற்றி வான்நோக்கி நிமிர்கின்ற
வீரமறவர்களின் தாய்வீடு
பாலை, குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதமென்று
நிலம் வகுத்துவாழ்கின்ற தமிழரிடை
சோலைப் பூவினம் போல்தமிழ்க் கவிதை
மலர வைத்தாள்.

தாயகத்துக் கற்புநிறை பிறழாத
காதல் சொன்னாள் - களம் சென்றார் வீரம் சொன்னாள்
களத்தில்
சாதல் இன்னே வரட்டுமென்று சென்றுவிட்ட
தலைமகனும்
சந்தனத்துக் கட்டை போல மணக்கட்டும்
இலக்கியத்தில் எனக் கூறிப்
பாதம் முதல் உச்சிவரை குளிர்கின்ற தாய்க்குலத்தை
எண்ணியெண்ணிப் பெருமை கொண்டாள்,
தன்பூவடிகள் புல்மீது அழுந்தியதால்
பனித்துளிகள் அழிந்துவிடும்
போரடியில் நெல்மணிபோல்பகைவர்களின் சிரம் வீழும்
அமர்க்களத்தில்!
இதை நினைத்து,
நடக்கின்றாள் ஔவையம்மை!
நாமனைக்கும் தமிழம்மை! அறிவம்மை! அழகம்மை!

காலூன்றிப் பனியொற்றி வருகின்ற தாயின் முன்
கோலூன்றிப்பிறிதொரு தாய் வந்து நின்றாள்.
"அடி! தும்பை மலர் முடிதாங்கி!
துவண்டுவிட்ட காலிரண்டும் வாழைத் தண்டாய்க்
குளிர்ந்து வரும் நேரத்தில் நீ ஏன் வந்தாய்?
விற்புருவம் என்றுன் ஆளன் அழைத்திட்ட காலம்போய்
வில்லுருவம் முதுகில் பெற்ற இள நங்காய்!
(பலத்த கைத்தட்டல்)
விழியிரண்டும் வேலென்றார் அன்று;
வழிஇருண்டுபோனதென்று கோல் கொண்டாய் இன்று!
தமிழ்நாட்டு முத்தெல்லாம் தீர்ந்ததென்றுபல் கழற்றிப்
பிறநாட்டு வாணிபத்தைச் செய்தவளே!
(பலத்த கைத்தட்டல்)
எங்கெழுந்தாய்? ஏன் பதைப்பு?
என்ன வாட்டம்?" எனக் கேட்டுக்
குறும்பு செய்தாள் ஔவையம்மை!
"வேலி போட முடியாது இளமைக்கென்று தெரிந்த பின்னும்
கேலி பேசும்உன் போக்கு புரியவில்லை"
என மறித்து அந்தத்தாய் பேசலானாள்-
"புண்பட்ட என்னகத்தில் புலமைத் தாயே உந்தன் கேலி,
பண்பட்டதமிழ் மருந்தாய்ப் பாய்வதை நான்
உணருகின்றேன்.
கண்கெட்ட கிழவி எந்தன் கரம்தொட்டு வணங்கிச்சென்ற
காளையை நான் மறக்கவில்லை.
மண் முட்டி எழுந்து நிற்கும் மாங்கன்றின்
தளிர்தான் மேனி
பொன்கொட்டிக் கொடுத்தாலும் வளையாத மனவலிமை
புலிக்குட்டி விளையாடும் அவன் மடியில்
புதர் விலங்கு நடுநடுங்கும் அவன் பிடியில்!
அந்த மகன் ஆசைமகன் அணிவகுத்தான்,
சொந்த மண்ணின் நலங்காக்கப் பணி வகுத்தான்!"
முடிக்கவில்லை முதியவளும்,
பொறுக்கவில்லை ஔவைக்குக் குறுக்கிட்டாள்
"களம் சென்ற மகன் வீரம் புகழ்ந்து கூறிக்
கண்கலங்காத் தாய்வீரம் காட்டுதலே தமிழர் மரபு!
முதியவளே! மறவர்குல வழக்கிற்குப்

புதியவளாய் இருக்கின்றாய்!
வியக்கின்றேன் - என்றாள்
"முழுதும்கேள் பெருமாட்டி!
பழுதொன்றும் காணமாட்டாய் என் நிலையில்!
அழுதழுது என் விழிகள் வீங்கியதை மறுக்கவில்லை.
பொழுதுதெல்லாம் கவலையினால் புலம்புவது
பொய்யல்ல!
ஏனென்று தெரிந்து கொள்வாய்
நானொன்றும் மறைக்கவில்லை!"
"சொல்" என்றாள் ஔவை! சொன்னாள் அவள்.
"கொற்றக்குடை சாயாத கொடித்தேர் மன்னர்
கற்றறிந்த பாவாணர் கடமைமிகு மாவீரர்
மற்றவர்க்கும் பெருந்தலைவர் அறிவாய் நன்று
அவர்படையில் இருக்கின்றோர் பல்லோர் வீரர்
ஆட்டுக்கடா அணி வகுத்துச் செல்வது போல்
அரசன் பின் நடப்பதற்குத் தயங்கமாட்டார்
ஆயிரம் பேர் மன்னர்க்குப் பின்னால் இருந்தும்
அவர் மட்டும் என் மகன்பால் அளவற்ற அன்பு கெண்டார்
போர்முனையில் ஓய்வெடுத்துக் கிடக்கும் போது
"தேறல்" என்னும் உற்சாகச் சாறுதனைத் திறல்மறவர்
அருந்துதற்குத்திரண்டு நிற்பார்.
அப்போது மன்னரவர் என்மகனை அருகழைத்து
அனைவரினும் அதிகபானம் அளித்து மகிழ்வார்.
என் வாட்டம் இப்போது கேட்பாயம்மா!
என்புகளைத் தெப்பமாக்கி நரிமிதக்கும் போர்க்களத்தில்
தலையுருட்டிப் பந்தாடும் பறவையினம்!
அத்தலையில் ஒருதலையாய் என்மகன் தலையும்
இருந்தாலன்றோ இறைவனளித்த
தேறலுக்கும் பெருமையுண்டு
மன்னன் அன்பை மிகையாப் பெற்றான்
(மண்டை என்றால் கிண்ணம்)
மண்டையில்தேறலும் அதிகம் பெற்றான்
மாண்டனன் போரில்; புகழ்
பூண்டனன் எனும் காட்சி
காண்டிடல் அரிதோ எனக் கலங்கினேன் அம்மா!

தவறா?" என்றாள்.
இதைத்தான்
"வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்
தன்னோர் அன்ன இளையர் இருப்பப்
பலர்மீது நீட்டிய மண்டையென் சிறுவனைக்
கால்கழி கட்டி லிற் கிடப்பித்
தூவெள் அறுவை போர்ப்பித்திலதே"

என்றார், கால்கழிகட்டில் என்றால் பாடை! கால் இல்லாத கட்டில், வெள்ளாட்டு மந்தை செல்வது மாதிரி அரசனைப் பின்பற்றிச்செல்கின்ற படையில் என் மகனும் ஒருவன். அவனுக்குத்தான் அதிக பானம் கொடுத்தார்கள். இருந்தாலும்கட இன்னும் அவன் அந்தக்களத்தில் செத்து பாடையில் ஏறினான் என்கிற செய்தி எனக்கு வரவில்லை என்று ஒரு புறநானூற்றுத் தாய் வருந்துகின்ற நிகழ்ச்சியை புலவன் பாடிக்காட்டுகின்றான்.

இன்னொரு தாய்; அந்த புறநானூற்றுத் தாயைப் பற்றிய பாடல். அனைவரும் அறிந்த பாடல்தான். அதையும் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

"நரம் பெழுந் துலறிய நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின் முதியோர் சிறுவன்
படையழிந்து மாறினன் என்று பலர்கூற
"மண்டமர்க் குடைந்தன னாயின் உண்டவென்
முலையறுத்திடுவேன் யானெ"னச் சினைஇக்
கொண்ட வாளொடு படு பிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே"

உன் மகன் போர்க் களத்தில் முதுகில் காயம் பட்டு இறந்து விட்டான் என்று ஒருவன் சொன்னானாம். அந்தப் பொய்யை அவள் நம்பி அப்படியானால் அவனுக்கு பால் கொடுத்த மார்பை அறுத்தெறிவேன்" என்று சொல்லி போர்க்களத்திற்குப் போனாள். ஆனால் அங்கு போனால் அவள் மகன், மார்பில் காயம்பட்டுக் கிடக்கிறான். இதுதான் நான் படித்துக் காட்டிய கவிதைக்குள்ள பொருள். அதையே தற்காலத் தமிழில் சொல்வதென்றால்,

குடிசைதான்! ஒருபுறத்தில்
கூரிய வேல்வாள்
வரிசையாய் அமைந்திருக்கும் - வையத்தைப்
பிடிப்பதற்கும் வெம்பகை முடிப்பதற்கும்
வடித்து வைத்த படைக்கலம்போல் மின்னும் மிளிரும்!
புலியின் குகையினிலே அழகில்லை-
புதுமையல்ல!
கிலியும் மெய் சிலிர்ப்பும்
கீழிறங்கும் தன்மையும் தலைகாட்டா
மானத்தின் உறைவிடம்-
மறவன் மாளிகை!
இல்லத்து வாயிலிலே
கிண்ணத்துச் சோற்றோடு
வெல்லத்தைச் சிறிது கலந்து
வயிற்றுக்குள் வழியனுப்பப்
பொக்கை வாய்தனைத் திறந்து
பிடியன்னம் எடுத்துப் போட்டாள்
பெருநரைக் கிழவி யொருத்தி.
ஓடி வந்தான் ஒரு வீரன்
"ஒரு சேதி பாட்டி!" என்றான்
ஆடி வந்த சிறுமி போல்
பெருமூச்சு வாங்குகின்றாய்
ஆண்மகனா நீ தம்பி!
மூச்சுக்கு மூச்சு இடைவேளை ஏற்படட்டும்; பின்
பேச்சுக்குத் துவக்கம் செய் என்றாள் அந்தக்
கிண்டலுக்குப் பேர் போன
கிழட்டுத் தமிழச்சி!
வேடிக்கை நேரம் இதுவல்ல பாட்டி - உன்
வாடிக்கை கேலியை விட்டுவிடு
'மடிந்தான் உன் மகன் களத்தில்
என்றான் - மனம்
ஒடிந்து நிமிர்ந்தாள் தாய்க்கிழவி அக்கணமே
"தாயம் ஆடுகையில் காய்களை
வெட்டுவதுண்டு - களமும் அதுதான்.
காயம் மார்பிலா? முதுகிலா?

கழறுவாய்” என்றாள் - முதுகிலென்றான்
கிழவி துடித்தனள்; இதயம் வெடித்தனள்;
வாளை எடுத்தனள்;
முழவு ஒலித்த திக்கை நோக்கி
முடுக்கினாள் வேகம்!
“கோழைக்குப் பால் கொடுத்தேன்
குப்புற வீழ்ந்து கிடக்கும்
மோழைக்குப் பெயர்
போர் வீரனாம்! முன்பொருநாள்
பாய்ந்து வந்த ஈட்டிக்குப்
பதில் சொல்ல மார்பைக் காட்டிச்
சாய்ந்து கிடந்தார் என் சாகாத கண்ணாளர்!
அவருக்குப் பிறந்தானா?
அடடா மானமெங்கே - குட்டிச்
சுவருக்கும் கீழாக வீழ்ந்து பட்டான்.
இமய வரம்பினிலே வீரம் சிரிக்கும் - இங்கு
வீணை நரம்பினிலே இசை துடிக்கும்
அதுவும் மானம் மானமென்றே முழக்கும்!
மாற்றார்க்கு மண்டியிட்டு வாழுகின்ற
மானமற்ற வம்சமா நீ - ஏடா
மறத் தமிழ்க் குடியிலே மாசு தூவி விட்டாய்
மார்பு கொடுத்தேன்
மடிமேல் வளர்த்தேன்-
தின்று கொழுத்துத்
திமிர் பாய்ந்த தோள்களெங்கே!
தினவெடுக்கவில்லையா? அந்தோ! பகைவர்
வேலுக்கு வழி சொல்ல வகையற்ற கோழையே - என் வீரப்
பாலுக்கு வழி சொல்வாய்!
என்று கதறினாள்
எண்பதை நெருங்கிய ஏழைக் கிழவி.
சென்றங்கு செரு முனையில்
சிதறிக் கிடந்த
செந்தமிழ்க் காளைகளைப்
புரட்டிப் பார்த்தாள் - அங்கு
நந்தமிழ் நாட்டைக் காக்க

ஓடிற்று ரத்த வெள்ளம்!
பிணக் குவியலிலே பெருமூச்சு
வாங்க நடந்தாள்!
மணப் பந்தலிலும் அந்த மகிழ்ச்சியில்லை மகன்
பிறந்த போதும் மகிழ்ச்சிக்கு
எல்லையுண்டு - அவன்
இறந்து கிடந்தான் ஈட்டிக்கு மார்பு காட்டி!
இதைக் கண்டாள் -இதயங் குளிர்ந்தாள்!
"எதைக் கண்டாலும் இனிக்கவலை இல்லை
என் மகன் வீரனாய் இறந்தான்" என்றாள்
அறுத்தெறிய இருந்தேன்
அவன் குடித்த மார்பை - அடடா!
கருத்தெரியப் பொய் சொன்ன கயவனெங்கே?
வாளிங்கே! அவன் நாக்கெங்கே?"
என்று அந்த அன்னைக் கிழவி அக்னியாய்
மாறினாள் என்றுகூறி
'அக்னி'யை வாழ்த்தி விடைபெறுகிறேன்.
இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

***

